விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 08 புதன்கிழமை (22.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 185

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## பக்தர்களை ஏற்றிவந்த பஸ் - ஹயஸ் புங்குடுதீவுக் கடலினுள் பாய்ந்தன!

### வயோதிபப் பெண் மரணம்; 75 இற்கும் மேற்பட்டோர் காயம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய தேர் உற்சவத் திற்குச் சென்று பக்தர்களை ஏற்றிக்கொண்டு யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பஸ்ஸும், ஹயஸ் வான் ஒன்றும் நேற்றுமாலை 5.30 மணியளவில் விபத்துக்குள்ளாகிக் கடலினுள் பாய்ந் ததில் ஒருவர் பலியானார்.

மேலும் 75 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

புங்குடுதீவு குறிகட்டுவானிலிருந்து நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்குச் சென்ற சுமார் இருநூறு பக்தர்களை ஏற்றிக்கொண்டு யாழ் திரும்பிய பஸ், புங்குடுதீவு பழைய துறைக்கு அண்மையில், முன்னால் (14 ஆம் பக்கம் பார்க்க)







### மூதூரில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

(திருமலை)

திருகோணமலை மூதூரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட் டுப் பகுதியில் உள்ள சம்பூரைச் சேர்ந்த ஒருவர், இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட் டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மூதூர் நகரில் இடம்பெற்றுள்ளது.

சுட்டுக்கொல்லப்பட்டவர் சித்திர வேலு சத்தியசீலன் (வயது 38) என அடையாளம் காணப்பட்டுள் ளார்.


குறிப்பிட்ட நபர் சம்பூரைச் சேர்ந்த இன்னொருவருடன் பொருட் கள் வாங்க மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவேளை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக (14 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் நிலைப்பாடு அறிந்த பின்பே பொதுக்கட்டமைப்பில் அடுத்த நகர்வு

### அரசின் தீர்மானங்களுடன் ஹெல்கீசன் இன்று வன்னி விஜயம்

(நமது நிருபர்)

பொதுக் கட்டமைப்புக் குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப் பாடு அறிந்த பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். பொதுக் கட்டமைப்பை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கும் விடு தலைப் புலிகளின் நிலைப்பாடு பெறப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (14 ஆம் பக்கம் பார்க்க)



பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நயினை நாகபூசணி அம்பாள் தேரில் ஆரோகணிக்கும் காட்சி.

## பொதுக் கட்டமைப்பு விவகாரம் முஸ்லிம் கட்சிகள் அதிருப்தி

(கொழும்பு)

உத்தேசப் பொதுக் கட்டமைப்பில் மூன் றாந்தரப்பினராகக் கைச்சாத்திடும் வாய்ப்பு முஸ்லிம்களுக்கு கிடைக்காமை குறித்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

நேற்று ஜனாதிபதி மாளிகையில் குறிப் பிட்ட சில அமைச்சர்களை ஜனாதிபதி சந்தித்து பொதுக் கட்டமைப்பு விவகாரம் குறித்து கலந்துரையாடியிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஜனாதிபதியுடனான சந்திப்பினை அடுத்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சி உறுப்பினர்கள் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் இல்லத்தில்கூடி இந்தவிடயம் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது (14 ஆம் பக்கம் பார்க்க)

### வாழைச்சேனை அலுவலகம் மீது நேற்றுமாலையில் தாக்குதல்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தின்மீது நேற்றுமாலை 5.30 மணியளவில் மோட் டார் சைக்கிளில் வந்தவர்களால் தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது.

அலுவலகத்தினுள் கைக்குண்டு வீசப்பட்டு, துப்பாக்கிச் பிரயோகமும் செய்யப்பட்டுள்ளது. அந்நேரம் அலுவலகத் தில் எவரும் இல்லாத காரணத்தினால் இழப்புக்கள் ஏற் படவில்லை. அலுவலக வேலி எரிந்துள்ளது.

தாக்குதலை நடத்தியவர்கள் (14 ஆம் பக்கம் பார்க்க)

### அரசுடன் ஜே.வி.பியை இணைக்க சு.க.அமைச்சர்கள் தீவிர முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசை விட்டு வெளியேறிய ஜே.வி.பி. தனது முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டுமென அமைச்சர்கள் சிலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இருசாராரையும் மீண்டும் ஒன்றிணைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளின்போது இதுபற்றி ஜே.வி.பித் தலை வர்களுக்கு தெளிவான விளங்கங்களை அளித்திருப்ப தாக அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தை விட்டு ஜே.வி.பி (14 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி - கட்சி உறுப்பினர்கள் முக்கிய சந்திப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

உத்தேச பொதுக் கட்டமைப்பு மற்றும் தற்போதைய அரசியல் நிலைபரம் தொடர்பாக ஆளுங்கட்சி உறுப்பினர் களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையே நேற்று முன்தினம் நடைபெறவிருந்த கூட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்து ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அறிவிக் கப்பட்டுள்ளது. அத்துடன் ஆளுங்கட்சி அமைச்சர்கள் யாவரும் கொழும்பில் தங்கியிருக்குமாறும் விடுக்கப்பட்ட அறிவிப்பும் ரத்து செய்யப்பட்டது. (14 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எரிமலையாக மாறும் திருமலை

15.05.2005 இல் இரவோடிரவாக திருமலை பேருந்து நிலையத்திற்கு அருகில் நிறுவப்பட்டுள்ள சிலையை அகற்றும் முயற்சி எதுவும் இதுவரை நடைபெறவில்லை. மாறாக சிலையைச் சுற்றி முள்வேலி இடப்பட்டு ஆயிரக்கணக்கில் சிங்களப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

உண்மையில்புத்த பெருமானுக்கு இராணுவம் காவலாக நிற்கின்றதா? அல்லது புத்தரையே சிறைப்படுத்தும் முயற்சியா? புத்தர் மீண்டும் பிறப்பெடுப்பாராயின் தன்பெயரில் நடைபெறுகின்ற கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுவது உறுதி. புத்தர் உருவவழிபாட்டை ஏற்றதுமில்லை. உருவவழிபாடு வழிபாடு ஊடாக தனிமனித வழிபாட்டை ஏற்கவும் இல்லை. அவரின் வரலாற்றை வரைந்துள்ள வரலாற்றாசிரியர்களின் குறிப்புக்கள் இதனை எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

சிங்களப் பொதுமக்கள், தமது உள்ளத்தினை ஒருநிலைப்படுத்துவதற்கு புத்தர் சிலை தேவை எனின் அதற்கு யாரும் தடை கூறமாட்டார்கள். ஆனால் உள்நேக்குடன் சதி நோக்குடன் தமிழீழ மண்ணில் புத்தர் சிலைகளைக் கொண்டு வந்து குவிப்பதைத்தான் வன்மையாகக் கண்டிக்கவேண்டியுள்ளது.

இச்சிலைகளைக் கொண்டு வந்து குவிப்பதன் நோக்கம் "வரலாற்றை திரித்து தமிழீழ மண்ணை சிங்கள பௌத்த வல்லாண்மைக்குட்படுத்தும் வஞ்சகச் செயலே". என்பதை உணரவேண்டும். ஆகவே தான் காளான் முளைப்பது போல புத்தர் சிலைகளும், புத்த கோயில்களும் தமிழ் மண்ணில் நிறுவப்படுவதை, ஆற்றல் அனைத்தையும் கொண்டு எதிர்த்தே தீரவேண்டும். உலகின் தலைசிறந்த தத்துவத்தை அளித்த புத்தருக்கு, தமிழர் உட்பட அனைத்துலக மக்களும் தனிமதிப்பு வழங்குவதை திசைதிருப்பி, தாம் தான் புத்த மதத்தின் தனிக்காவலர் (**Special Custodians of Buddhism**) என சிங்களவர் உரிமை கொண்டாடுவதைக் கண்டு உலகம் எள்ளி நகையாடுகின்றது.

இவற்றினை நினைவிற் கொண்டுதான் 1950களில் கொழும்பு நகரசபை மண்டபத்தில், புத்த குரு மார்கள பெருமளவு கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் உரை நிகழ்த்திய உலகப் புகழ் வாய்ந்த உடுகிருஷ்ண மூர்த்தி என்ற மெய்யியல் வல்லுனர், தத்துவஞானி பின்வருமாறு கூறினார்.

**"Oh! You Sinhalese don't Claim that You are the special custodiams of Buddhism. Buddhism does not belong to any linguistic or ethnic group Put it embraces the entire humanity Therefore if you want to be a Buddhist ceasc to be a sinhalesc but if you want to be a sinhalese cease to be a Buddhist. Don't confuse issues by calling your self as a sinhala Buddhist'**

சிங்கள மக்களே! நீங்கள்தான் புத்தமதத்தின் தனிக்காவலர் என உரிமை கொண்டாடாதீர்கள். புத்த தத்துவம் எந்த இனக் குழுவிற்கோ, மொழிக்குழுவிற்கோ உரியதல்ல. மாறாக மானிட சமுதாயம் அனைத்தையும் தழுவி நிற்கின்றது. ஆகவேதான் நீ ஒரு புத்தனாக இருக்க விரும்பின் நீ சிங்களவனாக இருக்க முடியாது. நீ சிங்களவனாக இருக்க விரும்பின் புத்தனாக இருக்க முடியாது. எனவே உன்னை நீ சிங்கள பௌத்தன் எனக் கூறி பிரச்சினையை உருவாக்காதே.

எனினும் சிங்கள பௌத்த வல்லாண்மையை நிலைநாட்ட முயல்கின்ற சிங்கள வெறியர்கள் இவர் கூற்றுக்கு செவிமடுப்பார்களா என்பது ஐயத்திற்குரியதே.

கநதளாய்க் குளத்தைக் கட்டியவன் யார்? குளக்கோட்டனா அல்லது 2ஆம் அக்கபோதியா?

புத்தர் சிலையை நிறுவி சிங்கள வெறியாட்டத்திற்குத் தூபமிட்டுள்ள திருமலை வாழ் சிங்களவர்கள் கந்தளாய்க்குளத்திலும் கண் வைத்துள்ளனர்.

கந்தளாய்க்குளத்தைக் கட்டியவன் மாபெரும் சோழ மன்னன் குளக கோட்டன் என்பதை நாடும் நாநிலமும் நன்கறியும். ஆயிரங்கால் கொணட கோணேசர் கோயிலையும கட்டியவன் இவனே. கந்தளாய்க குளத்தைக் கட்டியவன் குளக்கோட்டன என்ற முக்கிய குறிப்பினை திருமலையின் ஒல்லாந்த ஆளுநராக விளங்கிய 'வன்சன்டென்' (**Governor Vansenden**) 1786 ஆம் ஆணடு எழுதிய அவரது நாற் குறிப்பு எடுத்துக் காட்டுகின்றது. இக் குறிப்பு 1834இல் வெளிவந்த இலங்கைச் செய்திமடலில் (**Ceylon Gazetta**) அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது என்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

எனவே அக்கபோதிதான் இக் குளத்தைக் கட்டினான் என்பது பொருந்தாப் பொய் என்பது இங்கு புலனாகின்றது. கந்தளாய்க்குளத்தைச் சுற்றி வாழ்கின்ற தமிழ் மக்கள் மழையை வேண்டி ஆண்டு தோறும் 'திருக்குளத்து வேள்வி' என்ற பெயரில் பொங்கல் நிகழ்ச்சிகளை அண்மைக்காலம் வரை கைக்கொண்டு வந்ததை நினைவில் கொள்ளவேண்டும்.

வரலாற்று சான்றுகளெல்லாம் இவ்விதம் அமைந்திருக்கையில் கந்தளாய்குளத்தைக் கட்டிய்வன் அக்கபோதி என நிலைநாட்ட, கந்தளாய்க் குளததிற்கு முன்னாள் அவன் சிலை எழுப்பப்பட்டுள்ளது. இப்பொழுது திரையிடப்பட்டுள்ள இச்சிலை விரைவில் திரைநீக்கம் செய்யப்படும்.

இதுவரை ஏற்[illegible]கொள்ளப்பட்ட வரலாற்று சான்றுகள் புதைக்கப்பட்டு 2ஆம் அக்கபோதி மன்னன் தான் இக்குளத்தைக் கட்டினான் என்று சிங்கள வரலாற்று நூல்கள் வரையத்தொடங்கிவிடும். வரலாறே இவ்வாறு பொய்ச் செய்தியைக் காவி வரும் போது வரலாற்றைப் பயிலும் எம் தமிழ்க் குழந்தைகள் திருமலைக்கோ, கோணேசர் கோயிலுக்கோ, கந்தளாய்க் குளத்திற்கோ நாம் உருத்துடையவர்கள் அல்ல என்று எண்ணுவ[illegible] வழிசமைத்து விடும். இப் பொய்ச் செய்தி எவ்வளவு தூரம் உளவியல் அடிப்படையில் தமிழ்ச் சமுதாயத்தினைப் பாதிக்கும் என்பதை எம்மி[illegible] எத்தனைபேர் உணர்வரோ நாம் அறியோம்.

நீதிமன்றம் நீதிவழங்கும் என எதிர்பார்த்து ஏமாறலாமா?

நீதிமன்றம் எம் சார்பில் தீர்ப்பு வழங்கும் என்றோ அல்லது சிங்கள தலைமைப்பீடத்தின் சிந்தையில் மாற்றம் ஏற்படுமென்றோ எண்ணி நாம் ஏமாறுவோமாயின் வரலாறு எம் மீது வசைபாடும். கடந்த 3 காலாண்டுகளாகப் - சேர்.பொன இராமநாதன் காலம் தொட்டு ஏமாற்றப்பட்ட தமிழராகிய நாம் கடந்த கால கசப்பான பாடங்களில் இருந்தாவது பாடம் பயிலத் தவறக்கூடாது.

இச்சிலையையொட்டி இதுவரை எக்கருத்தையும் தெளிவுடனும் துணிவுடன் கூறவில்லை. இதன் உட்பொருள என்ன? பிரச்சினைகள் தட்டிக்கழிக்கப்படுகின்றன. தமிழ் மக்கள் திசைதிருப்பப்படுகின்றன.

சில நாட்களுக்கு முன் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவைச் சந்தித்த புத்த குருமார் புத்தர் சிலையை அகற்ற மாட்டோம் என்று ஓங்கி ஒலித்துள்ளனர். இதற்கு ரணில் விக்கிரமசிங்க கொடுத்த பதில் பொருள் புரியாத புன்னகையாகும். இனியாவது கண்திறக்க மாட்டோமா?

இயற்கை வளம், தொழில் வளம், பொருள் வளம், கடல்வளம் இவை அனைத்திற்கும் மேலாக கோணேசர் அருள் வளம்கொண்ட கோணமாமலையை நாம் இழப்போமாயின் எமக்கு வாழ்வுண்டா? என்பதை நாமே தீர்க்க வேண்டும்.

**மா.க.ஈழவேந்தன்**

# இராசி பலன்

**22.06.2005**
**(ஆனி 08, புதன்கிழமை)**
**புரணை முற்பகல் 10.23 மணிவரை**
**மூலம் முன்னிரவு 9.25 மணிவரை**
**இராகுகாலம் 11.54 -1.24 மணிவரை**
**சுபநேரம் 4.24 - 5.54 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | புதியதிட்டமிடல், சரீரப் பிரயாசை, பண விரயம், காரியதாமதம். |
| இடபம் | உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல், வாகன பயம், போசன சுகம். |
| மிதுனம் | புதிய முயற்சி, உறவினர் வருகை, ஜனவசியம், பொருள் சேர்க்கை. |
| கடகம் | சுவாரஸ்யமான நிலை, பெரியோர் சந்திப்பு, காரிய அனுகூலம், தொழில் நன்மை. |
| சிங்கம் | வியாபார நன்மை, புத்திரரால் கவலை, பூர்வ புண்ணிய கருமம், முயற்சி தாமதம். |
| கன்னி | தொழிலில் ஆர்வம், வீண்பயம், காரிய இடையுறு, சுபசெலவு. |
| துலாம் | அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, முயற்சி கைகூடும், பிரயாண நன்மை. |
| விருச்சிகம் | கோபமான நிலை, உடல் சோர்வு, சுப செலவு, கடின முயற்சி. |
| தனுசு | உறவினர் வருகை, நல்ல முயற்சி, உற்சாகம், நல்ல செய்தி. |
| மகரம் | சுப காரியச் செலவு, பிரயாணம், போசன சுகக் குறைவு, வீண் மனஸ்தாபம். |
| கும்பம் | போசன நன்மை, பொருள் சேர்க்கை, கௌரவமான நிலை, முயற்சி கைகூடும். |
| மீனம் | அதிகாரம், சுபகாரியம், உறவினர் சந்திப்பு, போசன சுகம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

**-வளவன்**

# நிவாரணப் பொருட்கள் நிறுத்தப்பட்டதால் யாழ்.மாவட்டத்தில் 40 ஆயிரம் குடும்பங்கள்

## பெரும் கஸ்டங்களை எதிர் கொள்கின்றனர்.

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 40 ஆயிரம் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு அரசினால் வழங்கப்பட்டுவந்த இலவச நிவாரண உணவுப் பொருட்கள் நிறுத்தப்பட்டமையைத் தொடர்ந்து அந்தகைய குடும்பங்கள் தமது உணவுத் தேவைக்குப் பெரும் கஸ்டங்களை எதிர் நோக்கிவருகின்றன எனத் தெரியவருகின்றது.

விசேடமாக யுத்த அனர்த்தங்களின் போது பிரதான உழைப்பாளர்களை இழந்த நிலையில் இருக்கின்ற குடும்பங்கள் தமது அன்றாட ஜீவனோபாய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு பிரச்சினைகளை அனுபவித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேசமயம் இத்தகைய குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இலவச நிவாரணப் பொருட்களை மீளவும் வழங்கும்படி கோரிக்கைகள் விடப்பட்ட போதிலும் கூட, எத்தகைய முன்னேற்றமும் ஏற்படவில்லை எனத் தெரியவருகின்றது. (அ-16)

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு ரூபா 37 இலட்சம் பெறுமதியான அம்புலன்ஸ்

## அகில இலங்கை இந்து மாமன்றம் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு ரூபா 37 இலட்சம் பெறுமதியான அம்புலன்ஸ் வண்டி ஒன்று வழங்கப்படவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றம் மக்களுக்கு தொண்டாற்றும் நோக்குடன் இந்த வருடம் 'சிவதொண்டன் அணி' ஒன்றை உருவாக்கி உள்ளதுடன் இவ் அணியினர் மக்கள் தொண்டிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இச் சிவதொண்டன் அணியின் பெயரிலேயே இவ் அம்புலன்ஸ் வண்டி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்படவுள்ளதாக அகில இலங்கை இந்து மாமன்றத்தலைவர் வி.கைலாசபிள்ளை தெரிவித்தார். (ற-19)

# வெளிநாட்டு நாணயக் கடத்தல் முறியடிப்பு ரூபா60 இலட்சம் அரசுடமை ஆக்கப்பட்டது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் 60 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணய நோட்டுக்களை இலங்கையில் இருந்து கடத்த முற்பட்ட நபரைக் கைது செய்திருப்பதாக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தம்மை பிரிட்டன் பிரஜையெனக் கூறிக்கொள்ளும் சந்தேக நபர் இதற்கு முன் 16 தடவைகள் இலங்கை வந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பணம் அரச உடைமை ஆக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரை ஒரு இலட்சம் ரூபா அபராதத்துடன் விடுவித்துள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-9)

# அடுத்த ஆண்டு தொழில் நுட்பக்கல்விக்குப் பல்கலைக்கழகம்

## தொழில் அமைச்சர் பியசேன கமகே நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தொழில்நுட்பப் பாடங்களைப் போதிக்கக் கூடிய பல்கலைக்கழகமொன்று இவ் வருடம் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக தொழில் பயிற்சி அமைச்சர் பியசேன கமகேதெரிவித்துள்ளார்.

இரத்மலானையிலுள்ள தேசியத் தொழிற்பயிற்சி அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் நிறுவப்படவுள்ள இப் பல்கலைக்கழகத்திற்கு கடந்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பத்துறையில் உயர் கல்வி கற்பதற்கு வசதியின்றி இருக்கும் மாணவர்களுக்கென இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் முதல் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன.

நாட்டின் 9 மாகாணங்களிலும் நிறுவப்படவுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் டிப்ளோமாப் பாடநெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களே இப் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி யப்பான், கொரியா, அமெரிக்கா சர்வதேச அமைப்புகள் பல உதவ முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# வெளிநாட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களின் பிள்ளைகள்

## பாடசாலை உபகரணங்களை இலவசமாகப் பெறுவர்

## வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்குப் பாடசாலை உபகரணங்களை இலவசமாக வழங்குவதற்கான அறிவுறுத்தல்களும் விண்ணப்பப்படிவங்களும் பாடசாலை அதிபர்களுக்கு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் உதவிகளைப் பெற்றுக்கொள்ளத் தகுதியான மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபர்களிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து அதிபரின் சிபார்சுடன் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பணியகத்தின் நலன்புரி முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் இம் மாதம் 1 ஆம் திகதி வரை பதிவு செய்து தற்போது வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் பிள்ளைகளுக்கே பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களின் பிள்ளைகளது கல்வி வளர்ச்சியை நோக்காகக்கொண்டு இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியத்தின நலன்புரி முகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ-9)

# யாழ். மாவட்டத்தில் மிதிவெடி அபாயம் குறைந்து வருகிறது

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மிதிவெடிகளால் பாதிக்கப்படுபவர்களின் தொகை இவ் வருடம் மிகவும் குறைந்த நிலையில் காணப்படுவதாக யாழ்அரச செயலகத்தில் இயங்கிவரும் மிதிவெடிகள் அகற்றும் பணியின் இணைப்புக்குழுவின் தகவல்கள் மூலம் தெரியவருகின்றது.

மாவட்டத்தில் 2001 ஆம் ஆண்டு 90 மிதிவெடிச் சம்பவங்களும், 2002ஆம் ஆண்டில் 70 ம, 2003 ஆம் ஆண்டில் 50 ம், 2004 ஆம் ஆண்டில் 20ம், 2005 ஆம் ஆண்டு மே மாதம் வரை 7 சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஹலோ டிரஸ்ட் நிறுவனம், டென்மார்க் மிதிவெடி அகற்றும் குழு மற்றும் இலங்கை இராணுவத்தின் பொறியியல் பிரிவும் மிதிவெடிகள் அகற்றி செயலிழககும் பணியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.(அ-16)

## மருத்துவமனை புனரமைப்பு

(அம்பன்)

வடமராட்சி கிழக்கு அம்பன் அரசினர் மருத்துவமனை பல வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

வன்செயலின் போது இம் மருத்துவமனையின் கட்டடங்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. தற்போது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-56)

## தூவல் நீர்ப்பாசனம்

(அம்பன்)

விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசன முறையை அறிமுகம் செய்துவைத்த யாழ். மாவட்ட கமநல சேவைகள் நிலைய உதவி ஆணையாளர் சுந்தரேஸ்வரன் வடமராட்சிப பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்து பொருத்தப்பட்ட தூவல் நீர்ப்பாசனத்தைப் பார்வையிட்டார்.

அம்பன், குடத்தனை பகுதி விவசாயிகளுடன் இவர் கலந்துரையாடி தூவல் நீர்ப்பாசன முறை பற்றி கேட்டறிந்துகொண்டார். விவசாயிகள் இத்தூவல் நீர்ப்பாசனம் குறித்து கருததுத் தெரிவிக்கையில், பயிர் வகைகளுக்கு இததூவல் நீர்ப்பாசனம் சிறந்ததுடன், நீரினை மீதப்படுத்துவதுடன் எரிபொருள் சிக்கனம், கூடிய வருவாயையும் பெறலாம் என்றனர். (ந-56)

## பாராட்டு விழா

இணுவில் பொது நூலகத்தினரும், திருநெறிய கழகத்தினரும் இணைந்து பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட இணுவில் க.தேவராஜாவுக்கு பாராட்டு விழாவினை நடத்தினர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராஜா அவர்கள் எதையும் இல்லை என்று சொல்லாது முயற்சி செய்கின்றேன். நிச்சயம் பலன் கிடைக்கும். எதற்கும் தயாராக இருங்கள் என சகல மாணவர்கள், பொதுமக்கள் என தன்னை நாடி வரும் அனைவரையும் கோபம் கொள்ளாது அனுசரிக்கத் தெரிந்த ஒரு உயர்ந்த மனிதர்தான்.

இன்று யாழ்.பல்கலைக்கழகத்தின் வணிகத்துறை பீடாதிபதியாக தெரிவாகி உள்ளார். இவரது சேவைக்கே தேடி வந்தது இததப் பதவி.

இவரே எதிர்காலத்தில் துணைவேந்தராகவும் வர பதவி காத்திருக்கின்றது என்று குறிப்பிட்டார். இந் நிகழ்வில் ஆசிரியர்கள் ந.விஜயசுந்தரம், இரா.அருட்செல்வம், முகுந்தன, அண்ணாதொழிலக அதிபா பொ.நடராசா ஆகியோரும் உரையாறறினர். (ந-122)

## திருடிய சிறுவன் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

ஊரெழுப் பகுதியில் வீடொன்றை உடைத்து பொருட்களைத் திருடிய சிறுவன் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளார்.

ஆட்கள் இல்லாத சமயம் வீட்டினுள் நுழைந்த பிரஸ்தாபச் சிறுவன் அங்கிருந்த 2 கமரா, சிடி பிளையர், கிறைண்டர் மற்றும் நீர் இறைக்கும் மோட்டார் ஆகியவற்றைத் திருடியுள்ளான்.

அதே இடத்தைச் சேர்ந்த யோகநாதன் உதயராணி என்பவரின் வீட்டிலேயே அப்பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

வீட்டின் உரிமையாளர் கோப்பாய் பொலிஸில் முறையிட்டதையடுத்து சந்தேகம் கொண்டு பிரஸ்தாப சிறுவனின் வீட்டை சோதனையிட்டபோது அப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து சிறுவன் கைது செய்யப்பட்டு பதில் நீதவான் திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது சிறுவனை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ச)

## சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

(கோப்பாய்)

கோப்பாய் மத்திய பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக மின் பாவனையாளர்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

அதைவிட அடிக்கடி இரவு வேளைகளில் மின் தடையும் ஏற்பட்டு வருகின்றது. இதனால் க.பொ.த.உயர்தரப் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதில் பலவித சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ந-79)

## கொள்ளைகள் தொடர்பில் 2 பெண்கள் உட்பட 8 பேர் வெள்ளவத்தைப் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பாரிய கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கொள்ளைக்கோஷ்டியைச் சேர்ந்த இரு பெண்கள் உட்பட எட்டு சந்தேக நபர்களை வெள்ளவத்தைப் பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

கொள்ளைச் சம்பவங்களின் போது பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் பெருமளவிலான ஆயுதங்களையும் சுமார் 60 இலட்சம் பெறுமதியான பொருட்களையும் 17 இலட்சம் பெறுமதியான வான் ஒன்றையும் கைப்பற்றியுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி வி.கே.விஜிய விக்கிரம தெரிவித்துள்ளார்.

தெஹிவளை, பிலியந்தல, கல்கிசை, நீர்கொழும்பு, பொரளஸ்கமுவ ஆகிய பகுதிகளில் இவர்கள் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

பொரளஸ்கமுவ, ரத்தினப்பிட்டி ஆகிய இடங்களில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-9)

## நிவாரணம் வழங்குக விவசாயிகள் கோரிக்கை

(இணுவில்)

இம்முறை வெங்காயச் செய்கை மேற்கொண்ட சகல விவசாயிகளும் பெருமளவான தொகைப் பணம் நஷ்டமடைந்துள்ளனர். குறிப்பாக இணுவில், உடுவில், சுன்னாகம், கோப்பாய், நீர்வேலி மற்றும் அளவெட்டி, மாதகல் போன்ற பகுதிகளிலே விவசாயிகள் பாரியளவு நஷ்டமடைந்துள்ளனர்.

தாம் வங்கியில் பணம் கடன் பெற்று விதை வெங்காயம் வாங்கி கூடியளவு மூலதனம் செலவிட்டு பயிர்ச்செய்கை மேற்கொண்டதாகவும் காலநிலை காரணமாகவும் விதை வெங்காயத்தில் ஏற்பட்ட அழுகல் காரணமாகவும் தாம் நட்டமடைந்துள்ளதாக கூறுகின்ற விவசாயிகள் தமக்கு அரசிடம் இருந்து உரிய நிவாரணம் பெறுத்தருமாறு விவசாய சம்மேளனத் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-122)

## 4 அமைச்சுக்கள் பற்றிய அறிக்கை அதன் பின்பே அமைச்சர்கள் நியமனம்

(கொழும்பு)

ஜே.வி.பியின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 4 அமைச்சுக்கள் தொடர்பிலான பூரண விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதியின் விசேட விசாரணைக்குழுக்கள் தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் அமைச்சர்கள் பதவி விலகியுள்ள நிலையில் குறிப்பிட்ட அமைச்சுக்களுக்கு புதிய அமைச்சர்களை நியமிப்பதற்கு முன் விசாரணைக்குழுக்களின் அறிக்கைகள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என மேலும் அந்த செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-9)

## ஆசிரியர்களின் தரம் I க்கான பதவி உயர்வுப் பரீட்சை நவம்பரில்

(கொழும்பு)

ஆசிரியர்களை முதலாம் தரத்திற்கு பதவி உயர்த்துவது தொடர்பான போட்டிப் பரீட்சை நவம்பர் மாதம் நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் செப்டெம்பர் 2 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

தற்போது வெளியிடப்படும் 2004ஆம் 2005ஆம் ஆண்டிற்கான சுற்றறிக்கைக்கு அமைய முன்னைய வருடத்திற்கான பதவி உயர்வுகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இவ்வாண்டில் பதவி உயர்வு பெறாத ஆசிரியர்களும் இப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். அவர்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் பதவி உயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (அ-9)

## போக்குவரத்துச் சட்டத்தை மீறும் தனியார் பஸ்சாரதிகள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர்

(கொழும்பு)

நாளொன்றுக்கு மூன்று தடவைகளுக்கு மேல் போக்குவரத்துக் குற்றங்களை இழைக்கும் தனியார் பஸ் சாரதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நகர போக்குவரத்து பொலிஸ் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான வை.ஜீ ஆர்.எம்.லாபீர் தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் சாரதிகள் மூன்று தடவைகளுக்கு மேல் ஒரே நாளில் வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை மீறி நடந்தால், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் மேலும் குறிப்பிட்டுளளார்.

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாரஹேன்பிட்டியில் உள்ள மகளிர் மத்திய பயிற்சி நிலையத்தில் இது தொடர்பாக நடத்தப்பட்ட விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தனியார் பஸ் சாரதிகளும் ஏனைய சில வாகன சாரதிகளும் வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை தொடர்ந்தும் மீறி வருகின்றனர்.

இவர்களுக்கு அதே இடத்தில் தண்டனைகள் வழங்கபபட்டு வந்தாலும் இதனையும் மறி சில சாரதிகள் செயல்பட்டு வருகின்றனா.

எனவேதான் இந்த விவகாரம் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

## தனது ஆட்சிக் காலத்தில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதே ஜனாதிபதியின் குறிக்கோள்

(கொழும்பு)

சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டிய தன் அவசியம் தோன்றியுள்ளதால் ஜனாதிபதி சில முக்கிய தீர்மானங்களை எடுப்பதாக மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

அரச நிர்வாகத்தில் தோன்றியுள்ள நெருக்கடி நிலைமைகளை கவனத்தில் கொண்டு ஜனாதிபதி அந்தத் தீர்மானங்களை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது ஆட்சிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் நாட்டில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதே ஜனாதிபதியின் குறிக்கோளாகும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முஸ்லிம் இளைஞர் சங்கத்தின் 55ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (அ-9)

## ஆலயங்களில் இன்று....

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

* * *

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலயத்தில் இன்று தேர்த் திருவிழா இடம் பெறும்.

* * *

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவில் வருடாந்த மஹோற்சவத்தில் இன்று தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

* * *

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில தீர்த்தத் திருவிழா இன்று நடைபெறும்.

* * *

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரா கோவில தீர்த்தத் திருவிழா இன்று இடம்பெறும்.

* * *

மருதங்கேணி கந்தசுவாமி கோவில் தீர்த்தோற்சவம் இன்று நடைபெறும். (ந-2)

## விபத்தொன்றில் 11 பேர் காயம்

(கொழும்பு)

ஹபரதுவ தலவல்லப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற பஸ் வாகன விபத்தில் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் காயமடைந்தவர்கள் ஹபரதுவ வைத்தியசாலையில் அனுமதிக்கபபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவமானது பஸ் வண்டி ஒன்றுடன் வான் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் மோதியதாலேயே ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஸ்வண்டி வீதிப் போக்குவரத்து விதிகளை மீறிச் சென்றுள்ளதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## மெய்வல்லுனர் போட்டி

(மருதங்கேணி)

உடுத்துறை மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் வித்தியாலய அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக பழைய மாணவனும், மருதங்கேணி ப.நோ.கூ.சங்கத்தலைவருமான எஸ்.தியாகராசாவும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் மற்றும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-35)

## 'ஞானச்சுடர்' வெளியீடு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் ஆனி மாத இதழ் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் வெளியட்டுரையை பிரம்மஸ்ரீ.ப.வைத்தீஸ்வரன் தேவஸ்தான பிரதம குரு மனோகரக் குருக்களும், மதிப்பட்டுரையை இளைப்பாறிய ஆசிரியர் க.நவரெத்தினமும் வழங்கவுள்ளனர். (ந-35)

## பொங்கல் விழா

(மருதங்கேணி)

புலோலி தெற்கு குரும்பகட்டி வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று பகல் அடியார்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை செய்வார்கள். காவடிகள், கரகங்கள் கோவிலை வந்தடையும். பிற்பகல் 3 மணிக்கு விசேட அபிஷேகங்கள் செய்யப்பட்டு 4 மணிக்கு பூசை இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து அடியார்களால் நேர்த்திக்காக விடப்பட்ட கிடாய்கள், கோழிகள் ஏலத்தில் விற்கப்படும். (ந-35)

## இன்று ஒரு தகவல்

# புகைப் பழக்கம்

சிகரெட் புகைக்கும் பழக்கமே இல்லாத ஒரு ஊருக்கு ஒரு சிகரெட் வியாபாரி வந்தார். வியாபாரம் செய்து பார்த்தார். அந்த ஊரில் யாரும் சிகரெட் வாங்கும் வழியைக் காணோம். இவர் என்ன செய்யலாம் என்று யோசித்தார். உடனே பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். சிகரெட்டின் பெருமைகளைப் பற்றி! எப்படி தெரியுமா?

புகைபிடிக்கும் எவரையும் நாய்கடிப்பதில்லை. புகை பிடிப்பவனுக்குப் பெண் குழந்தை பிறப்பதில்லை. புகை பிடிப்பவனின் வீட்டுக்குத் திருடன் வரமாட்டான். புகை பிடிப்பவனை முதுமை நெருங்காது என்று கூறிவிளம் பரம் செய்ய ஆரம்பித்தார். மக்களும் இதில் நிறைய நன் மைகள் இருக்கும் போலிருக்கிறது என்று நினைத்தார் கள்.

உடனே சிகரெட் வாங்க ஆரம்பித்தார்கள். வியாபாரம் சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டது. ஒரு வருடம் ஆனது புகையிலையின் மகிமைபற்றி அந்த வியாபாரி சொன் னது பொய் என்று புரிந்துகொண்டார் ஒருவர். உடனே வியா பாரியைத் தேடிக் கொண்டுபோனார். ''என்ன நீ... இந்த ஊர் மக்களை பொய் சொல்லி ஏமாற்றிவிட்டாயே...'' என்று கத்தினார். ஆனால் அந்த ஆள் கொஞ்சம் கூட அசரவில்லை நான் சொன்ன எதுவும் பொய் இல்லை என்று சாதித்தார்.

இவர் விடவில்லை "அது எப்படி? புகை பிடிப்பவனை நாய் கடிக்காது என்று சொன்னாயே அது பொய் தானே'' என்றார். இதற்கு அந்த வியாபாரி விளக்கம் கொடுத்தார். "அப்படி இல்லை புகை பிடிப்பவன் உடலில் பலமிருக் காது தள்ளாடித் தள்ளாடித்தான் நடப்பான் அதனால் எப் போதும் கையில் ஒரு ஊன்றுகோல் வைத்திருப்பான். கையில் தடியோடு இருப்பவனைக் கண்டால் நாய் நெருங்காது அதுதான் அப்படிச் சொன்னேன்'' என்றார்.

"பெண் குழந்தை பிறக்காது என்று சொன்னாயே அது எப்படி?'' என்று கேட்டார் இவர். "உண்மையில் அவனுக்கு எந்தக் குழந்தையுமே பிறக்காது அதனால் பெண் குழந் தையும் பிறக்காது என்பது உண்மைதானே" என்றார் அவர். "புகை பிடிப்பவனின் வீட்டிற்குத் திருடன் வரமாட்டான் என் றாயே?'' என்று கேட்டார். "ஆமாம்! புகைப்பிடிப்பவன் இரவு முழுவதும் இருமிக்கொண்டே இருப்பான் அதனால் ஆள் விழித்திருக்கிறான் என்று நினைத்து திருடன் வரமாட்டான் என்றார் இவர். "எல்லாம் சரி! புகைப்பிடிப்பவன் முதுமை அடைவதில்லை என்றாயே? அது எப்படி சாத்தியம் '' என்று கேட்டார். "முதுமை வருவதற்கு முன்பே அவன் இறந்து விடுவான் சார்! அதன்பின் எப்படி அவனை முதுமை நெருங் கும்?'' என்றார். வியாபாரி நியாயம் தான் என்று இவரும் திரும்பி வந்து விட்டார்.

இந்தக் கதையில் இருந்து வியாபாரத் தந்திரம் என் றால் என்ன என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது. புகைப் பழக்கம் எவ்வளவு கெடுதல் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது. சிகரெட் பிடிப்பவர்கள் எந்த நேர மும் அதை நிறுத்தலாம். 70 வயது ஆன ஒருவர் அது வரைக்கும் சிகரெட் பிடித்துக் கொண் டிருந்தவர் அந்த வயதில் அதைக் கைவிட்டு விட்டார். என்று வைத்துக் கொள்ளுங்கள் அவர் அதிக நாள் வாழ்வாராம். இவ் வளவு காலம் பிடித்துவிட்டோம் இனி மேல் நிறுத்தி என்ன பயன் என்று நினைக்க வேண்டியதில்லை.

அமெரிக்காவில் இதைப்பற்றியெல்லாம் சோதனை செய்து பார்த்திருக்கின்றனர். "ஏற்கனவே பிடித்த சிகரெட் வயதான காலத்தில் கெடுதல் செய்யும் என்று நினைக்க வேணடியதில்லை. எந்த நேரமும் அதைக் கைவிடலாம். எந்த நேரம் அந்தப் பழக்கத்தைக் கைவிட்டாலும் அதன் பின் நல்லபடியாக வாழலாம்! இது தான் நிபுணர்களின் கருத்து.

இவ்வளவெல்லாம் சொல்லியும் யார் இதெல்லாம் கேட்கி றார்கள். இந்தக் காலத்தில் ஒரு நாள் ஒரு சிறுவன் கடைக்கு வந்தான் ''இரண்டு சிகரெட் கொடுங்கள்''என் றான். "இவ்வளவு சிறிய பையனாக இருக்கிறாய்-சிகரெட்கேட்கிறாயே இந்த வயதிலேயே உனக்கு அந்தப் பழக் கம் இருக்கிறதா? என்று கேட்டார் கடைக்காரர்'' ''எனக்கு அந்தப் பழக்கம் கிடையாது சார்'' என்றான் பையன்.

"பின்ன இது யாருக்கு?'' என்று கேட்டார் அவர். "என் தம்பிக்கு சார்'' என்றான் அவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# நிரந்தர வீடுகள் அமைப்பதில் தாமதம்

# மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்

(தென்மராட்சி)

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி பேரலையின் காரணமாக வீடுகளை இழந்த நிலையில் இருக்கும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பதற்கு பல நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்திருந்த போதிலும்கூட இது வரையும் எந்தவொரு நிறுவனமும் நிர்மாணப்பணிகளை ஆரம்பிக்காமல் இருப்பது குறித்து சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலை உச்சமடைந்துவருகின்றது.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தளத்தினால் வெளியிடப்பட்ட மே மாதத்திற்கான நிலவர அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

சுனாமி பேரலையினால் இருப்பிடங்களை இழந்த குடும்பங்களுக்குப் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 18 கிராம சேவையாளர் பிரிவுகளில் தேவை மதிப்பீடு செய்யப்பட்ட ஆயிரத்து 345 அரை நிரந்தர வீடுகளில் இதுவரையும் ஆயிரத்து 210 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வீட்டுத்திட்டத்தில் இரண்டாம் கட்டமாகிய நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிக்கென தொண்டமனாறு, வல்வெட்டித்துறை,பொலிகண்டி மேற்கு, பொலிகண்டி கிழக்கு ,திக்கம் சக்கோட்டை, இன்பருட்டி,சுப்பர் மடம், பருத்தித்துறை கிழக்கு, தும்பளை கிழக்கு, கற்கோவளம் மற்றும் புனித நகர் ஆகிய இடங்களில் 525 நிரந்தர வீடுகளை அமைப்பதற்கென காணிகள் இனங்காணப்பட்டுள்ளன.

ஆனபோதிலும் கூட நிரந்தர வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை போரூட் நிறுவனம் மட்டுமே 26 வீடுகளை அமைக்கும் பணியினை ஆரம்பித்துள்ளது.

ஏனைய நிறுவனங்கள் எதுவும் தமது நிர்மாணப் பணிகளை இன்னமும் ஆரம்பிக்கவில்லை.இது இவ்விதமிருக்க சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 43 .22 கிலோ மீற்றர் வீதிகள் உடனடியாக புனரமைப்புச் செய்யப்படவேண்டிய நிலையில் இருப்பதாகவும் இதற்கு 123.52 மில்லியன் ரூபா தேவை எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள 16 பாடசாலைகளை முழுமையாகவும், பகுதியாகவும் புனரமைப்புச் செய்வதற்கு 536.5 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சுனாமி பாதித்த இடங்களில் 50 முன்பள்ளிகளை நிர்மாணிப்பதற்கு சுனாமி ஒருங்கிணைப்புக் குழு இலக்கு கொண்டுள்ள போதிலும் கூட 10 முன்பள்ளிகள் மட்டுமே இதுவரை பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

அத்தோடு விவசாயம், மீன்பிடி, போக்குவரத்து , மீள் குடியமர்வு,தொலைபேசி போன்ற விடயங்கள் குறித்தும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.(அ-16)

### வவுனியா, மன்னார் மாவட்ட

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை

(வவுனியா)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் அரசாங்கத் திட்டத்தின் கீழ் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் விண்ணப்பித்த பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சைகள் இன்று தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளன. வேலையற்ற பட்டதாரிகளுக்குப் பொருத்தமான தொழில் வழங்கும் திட்டத்தின் கீழ் கீழமைப்பு நிலையில் உள்ள பட்டதாரிகளைப் பொருத்தமான பதவிகளுக்கு நியமிப்பதற்கும் ஏதுவாக நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

வவுனியா மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சைகள் மாவட்ட செயலக வளாகத்தில் உள்ள பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

மன்னார் மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சைகள் மன்னார் மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளன.

விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றும் போது சகல ஆவணங்களின் பிரதிகளுடன் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (அ-9)

### சிறைகளினுள் குண்டு, பணம்,தொ.பேசி;

## தீவிர விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பொரளை மகஸின் சிறைச்சாலைக்குள் பணம், போதைப்பொருள் மற்றும் கையடக்க தொலைபேசி ஆகியவற்றைக்கொண்டு செல்லும் போது கைது செய்யப்பட்ட சிறைச்சாலை அதிகாரி ஒருவர் பொரளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிடப்பட்ட பொருட்களைச் சட்டவிரோதமாக சிறைச்சாலைக்குள் கொண்டு சென்றதற்கான காரணத்தைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் இடம் பெற்று வருவதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரூமிக் மர்ஞ்த் தெரிவித்தார்.

சிறைச்சாலை விசேட புலனாய்வுப் பிரிவினால் குறிப்பிடப்பட்ட அதிகாரி கைது செய்யப்பட்டார். இதேவேளை கண்டி போகம்பரை சிறைச்சாலைக்குள் கண்டு பிடிக்கப்பட்ட குண்டு தொடர்பான விசாரணைகளும் இடம் பெற்றுவருவதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ரு-2)

### தமிழகத்தில்

# ஈழ அகதிகளின் முகாம்களில் பொலிஸார் தீவிர சோதனை

(சென்னை)

இந்தியாவில் ஈழத் தமிழர்கள் தங்கியுள்ள அகதி முகாம்களில் தமிழகப் பொலிஸார் தீவிர சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈரோடு, மலையம்,படையம், ஈச்சம் பள்ளி, பவானி சாகர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அகதி முகாம்களிலேயே இத் தேடுதல் நடாத்தப்பட்டுள்ளது.

அகதி முகாம்களில் அகதிகளின் பெயரில் விடுதலைப்புலிகள் தங்கியுள்ளார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இத்தேடுதல் நடாத்தப்பட்டுள்ளது.

அத்துடன் முகாம்களில் பதிவு செய்து தங்கியிருப்பவர்கள் மற்றும் மேலதிகமாகத் தங்கியிருப்பவர்கள் பற்றியும் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளதினால் அகதி முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் தமிழகப் பொலிஸாரின் அனுமதி பெற்று தாயகம் திரும்பி சோதனை நடத்தப்பட்ட அகதி முகாம்களில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மேல் கூடுதலாக தங்கியுள்ளார்களா என பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அப்போது தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மேல் தங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வேறு முகாம்களில் இருந்து வந்து தங்கியிருப்பவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

முகாம்களில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மேல் யாரும் தங்கக்கூடாது என்றும் அப்படி புதிதாகத் தங்குபவர்கள் பொலிஸிடம் அனுமதி பெற்றுத்தான் தங்க வேண்டும் என்றும் அவ்வாறு தங்குபவர்கள் தொடர்பில் தமக்குத் தெரிவிக்கவேண்டும் எனவும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இத்தேடுதல் குறித்து கருத்துவெளியிட்ட தமிழகப் பொலிஸார் வழமையாக நடத்தப்படும் சோதனை என்றும் பதிவு செய்யாமல் தங்கியிருப்பவர்கள் தொடர்பிலேயே சோதனை நடத்தப்பட்டமையும் தெரிந்ததே. (ரு-8)

## மன்னார் தாக்குதல் விசாரணை ஆரம்பம்

(மன்னார்)

மன்னாரில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகங்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தென்னகோன், மன்னார் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் றாசான் விஜயசிங்க, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமை அதிகாரி றொபோட்சர் ஆகியோர் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறையினர் இச்சம்பவம் தொடர்பாக விசாரணையை மேற்கொண்டவர்களிடம் விளக்கியிருப்பதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பதில் பேச்சாளர் வில்லியம் தெரிவித்துள்ளார்.

மன்னார் அரசியல்துறை அலுவலகம் மீது நேற்று முன்தினமிரவு துப்பாக்கிப் பிரயோகமும் கிரனேற் வீச்சும் நடாத்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி 36 அபி.திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தனது 2005ஆம் ஆண்டிற்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் 36 அபிவிருத்தித் திட்டங்களை வன்னித் தேர்தற் தொகுதியில் இவ் வாண்டில் மேற்கொள்வதற்கு நட வடிக்கை எடுத்துள்ளார்.

நிதியின் கூடுதலான பங்கு கிராமிய வீதி அபிவிருத்திகளுக்கும், கிராமிய மின்னிணைப்பு வசதிகளுக்கும், கல்விசார் நடவடிக்கைகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வன்னித் தேர்தல் தொகுதி இளைஞர்களை மாவட்ட அடிப்படையில் உதைபந்தாட்டத்தில் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் உதை பந்தாட்ட பயிற்சிப் பட்டறைகள் இவ்வருடத்தில் குறிப்பிட்ட மாவட்டங்களில் நடாத்துவதற்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன (வ)

# தமிழகப் பயணம்

**பயணக் கட்டுரை**

# உயர்நீதிமன்றத்தில் மனுநீதிச் சோழன்

**என். விஜயன்**

20 சைதாப்பேட்டைப் பெருமாள் கோவிலில் சினிமாப் படம் எடுப்பதைத் தடை செய்யுமாறு உத்தரவிடக் கோரி ஆலய நிர்வாகம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

பெருமாள் கோவிலில் சினிமாப் படம் ஏடுக்கப்படுவதால் ஆலயத்தின் மகிமைகுப் பங்கம் ஏற்படுகின்றது. நடிகர் நடிகைகள் அரைகுறை ஆடைகளுடன் ஆலய உள் வீதிக்குள் நின்று ஆடுகின்றனர்.

இதனால் ஆலயத்திற்கு வருகின்ற அடியார்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர் எனக் குறிப்பிட்டு, ஆலய நிர்வாகத்தினர் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கைப் பார்ப்பதற்காக பார்வையாளர்கள் பலர் வந்திருந்தனர். வந்திருந்தவர்கள் அனைவருமே வேட்டி கட்டியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

நீதிமன்றத்திற்குப் போனால் வழக்கு விசாரணைகளைக் கவனிக்க வேண்டியதுதானே! அவர் வேட்டி கட்டியிருந்தார். இவர் சேலை உடுத்திருந்தார் இதெல்லாம் உமக்கு ஏன்? என்று நீங்கள கேட்பது என் இதயத்துச் செவிக்குக் கேட்கவே செய்கின்றது.

உங்கள் கேள்வி நியாயமானதாயினும் என் பார்வையிலும் அர்த்தம் இருந்ததாகவே நான் கருதிக் கொள்கிறேன்.

அதாவது ஆலயத்திற்குள் சினிமாப் படம் எடுப்பது, நியாயமற்றதும் எமது சமயப் பண்பாடடிற்கு ஒவ்வாததுமாகும். அப்படியானால் அந்த ஒவ்வாமைக்கு எதிராக இளைஞர் சமூகமா வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

அல்லது வழக்குத் தாக்கல் செய்தவர்களின் பின்னணி என்ன என்பதை நோட்டமிடுவது உயர்நீதிமன்றத்திற்கு வந்த வழக்கின் தாற்பரியத்தை உணர்வதற்கு அவசியமாகும்.

அந்த வகையில் பிரஸ்தாப வழக்கைத் தாக்கல் செய்தவர்கள் தமிழ்ப்பண் பாட்டை இறுக்கமாக நேசிக்கின்றவர்கள்.

என்பதை அவர்களின் ஆடைக் கலாசாரத்தில் இருந்து அறிய முடிந்தது.

> **சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மனுநீதிகண்ட சோழனின் சிலையின் அடியில் எழுதப்பட்ட சிலப்பதிகார வாசகம்**
>
> **ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான்**
> **தன் அரும் பெறற் புதல்வனை ஆழி மின்**
> **மடித்தோன் (சிலம்பு)**

வீழக்காளிகளுக்காக பெண் சட்டத் தரணியொருவரே வாதிட்டார். நீண்ட நேரமாக வாதங்களைக் கேட்ட நீதிபதிகள் களைப்படைந்தவர்கள் போல வழக்கை ஒத்திவைத்தனர்.

முதலாவது அமர்வு நிறைவடைந்ததும் நீதிபதிகள் எழுந்து கொள்ள அவர்களோடு ஒத்தாற் போல் சட்டத்தரணிகளும், பார்வையாளர்களும் எழுந்து கொண்டனர். சட்டத்தரணிகளுக்கு நெருக்கமாக நின்றுகொண்டு செய்திகளைச் சேகரித்த செய்தியாளர் திரு. தங்கராஜ் என்னையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்தார். அன்றைய தினம் நீதிமன்றில் நடந்த செய்திகளைத் தொகுத்து வழங்கும் கடமை எனக்கிருந்த போதிலும், உயர்நீதிமன்ற வளாகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் என்னுள் உறுத்திக்கொள்ள, திரு. தங்கராஜிடம் விடயத்தைக் கூறி விட்டு நீதிமன்ற வளாகத்தைச் சுற்றிப் பார்க்கும் வேலையில் ஈடுபட்டேன்.

## மனுநீதிகண்ட சோழனின் சிலை

பிரிட்டிஷ் கலாசாரப் பின்னணியில் அமைக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான சென்னை உயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியைச் சுற்றிப் பார்ப்பதென்பது சாதாரணமான விடயமல்ல. இருந்தும் என்னால் முடிந்த வரை பார்ப்பதென்ற மனத்திடத்தோடு நடக்கத் தொடங்கினேன்.

சிறிது தூரம் சென்றதும் வெண் கலத்தால் செதுக்கப்பட்ட சிலை காட்சிக்குத் தெரிந்தது.

யாழ்ப்பாணத்தில் காகங்களின் இருப்பிடமாகக் காட்சி தரும் வள்ளுவர் சிலை, ஔவையார் சிலை போலல்ல அது. எந்த நோக்கத்திற்காக சிலை எடுக்கப்பட்டதோ அந்த நோக்கைப் பிரதிபலிப்பதாக அந்தச் சிலை வைக்கப்பட்டிருந்தது.

நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தப்பட்டுள்ள அந்தச் சிலையைப் பார்ப்பதில் யாருமே அக்கறை கொள்ளவில்லை. அதற்குக் காரணமும் இருந்தது. உயர் நீதிமன்றத்திற்கு வருகின்றவர்கள் பெரும்பாலும் வழக்கு விசாரணைக்காகவே வந்திருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் தத்தம் வழக்கு விசாரணை பற்றிய சிந்தனை இருக்குமே தவிர, கட்டடத்தையும் சிலையையும் தொட்டுப் பார்க்கவா? நினைப்பார்கள்.

ஆனால் என் நிலை அப்படியல்ல. நீதிமன்றத்தைச் சுற்றிப்பார்ப்பதே என் இலககாக இருந்தது. அதனால் நீதிமன்ற வளாகத்திலிருந்த அந்தச் சிலைக்கு அண்மித்துச் சென்று பார்த்தேன். மனுநீதிகண்ட சோழன் எனப்பொறிக்கப்பட்டிருந்தது. அதற்குக் கீழே


ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு
சுடத்தான்
தன் அரும் பெறற் புதல்வனை
ஆழிமின் மடித்தோன் (சிலம்பு)

என்ற செய்யுள் எழுதப்பட்டிருந்தது. தமிழினத்தின் பெருமை பேசும் மனுநீதி கண்ட சோழனின் சிலை யும், வாசகமும் உரிய இடத்தில் உரிய கௌரவத்தோடு இருப்பது கண்டு பிரமித்துப் போனேன்.

(வளரும்)


# நயினையில் நேற்று இரதோற்சவம்...













படங்கள்: ஞா.ஐங்கரன்





# சனிப் பெயர்ச்சி

**27.06.2005ஆம் திகதி சனிபகவான் மிதுன ராசியினின்று கடக ராசிக்குச் செல்கிறார். இந்த சனிப் பெயர்ச்சியால் 12 இராசிக்கும் 27 நட்சத்திரங்களுக்கும் உரிய பலன்களும் கடைப்பிடிக்கவேண்டிய பரிகாரங்களும் இங்கே தரப்படவுள்ளன.**

## உங்களுக்கு எப்படி?

## மிதுனம்

*காரிய விழிகளுடன் எதிலும் அறிவாளியாகவும் வெளிவட்டாரப் பழக்கத்தை அதிகமாக விரும்பும் பண்பாளர்களே!*

உங்களுக்கு தற்போது நிலவும் சங்கடமான காலங்கள் சனி மாறுதலால் முழுவதும் மாறப்போகிறது. ஜென்ம ராசியில் சஞ்சரிக்கும் சனி பகவான் வரும் 27.06.2005இல் 2ஆம் வீட்டிற்கு மாறுவதால் ஏழரைச்சனியில் பிரதான காலமான 5 ஆண்டுகள் முடிகிறது. 2இல் சனி சஞ்சரிக்க இருப்பது பாதச்சனி என்றாலும் தற்போதைய நிலைப்பாட்டை விட ஓரளவு அனுகூலமான பலனை மாறுதலுக்கு பின்பு அடையலாம். பணவிஷயத்தில் சற்று கண்டிப்பாக இருப்பது உத்தமம். உடல் ஆரோக்கிய ரீதியாக நல்ல மாறுதல் ஏற்படும்.

ஆண்டுக்கோளான குருபகவான் வரும் 19.09.2005 முதல் 20.10.2006முடிய 5ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய இருப்பது உங்களுக்கு ஒரு உற்சாகத்தினை உண்டாக்கும் அமைப்பாகும். சனி 2இல் சஞ்சரிக்க உள்ளதால் நீங்கள் நெருங்கியவர்களிடம் நிதானத்தினை கடைப்பிடிப்பதும் குடும்பத்தில் உள்ளவர்களை கோபித்து கொள்ளாமல் இருப்பதும் உத்தமம். தொழில் நிலையில்கூட அனுகூலமான மாற்றங்கள் ஏற்படும். என்றாலும் எதிலும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செயல்படுவது மிகவும் உத்தமம். சிலருக்கு நெருங்கிய உறவினர்களை இழக்கும் அமைப்பு உண்டாகும். ஏழரைச்சனியில் பாதச்சனி காலம் என்பதால் ஓரளவுக்கு மாற்றங்கள் இருக்கும். என்றாலும் முழுமையான ஏற்றத்தினை தற்போது அடையமுடியாது. குரு 5இல் சஞ்சரிக்கும் காலத்தில் ஓரளவு சாதகப்பலன் ஏற்படும்.

**உடல் ஆரோக்கியம்:** உடல் நலனில் இதுவரை நிலவிய அலைச்சல்கள் சற்றே குறையும் உடல் நலனில் தொடாந்து அக்கறை செலுத்த வேண்டும். சிலருக்கு பித்தம் நரம்பு சம்பந்தமான உடல் உபாதைகள் உண்டாகும். சிறு சிறு காயங்களும் ஏற்படலாம். கவனமுடன் செயல்படவேண்டும். மனைவி மற்றும் புத்திரர்களின் வழியில் அதிகமான மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தும் நெருக்கமானவர்களுக்கு சில ஆபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளதால் நிதானமாக செயல்படவேண்டும்.

**கொடுக்கல் வாங்கல்:** கொடுக்கல் வாங்கலில் சாதகமற்ற பலன்களையே ஏற்படுத்தும். பொருளாதார நெருக்கடிகள் சற்றே குறையும். பெரிய தொகைகளையும் முன் ஜாமீனையும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். அசையாசொத்து செலவுகளை ஏற்படுத்தும். வண்டி வாகனம் மூலம் தேவையில்லாத வீண்செலவுகள் உண்டாகும். வம்பு வழக்குகளில் இழுபறிநிலையே காணப்படும். பங்காளிகளிடம் சற்று எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துப் போகவேண்டும்.

**தொழில் வியாபாரம்:** செய்யும் தொழில் வியாபாரத்தில் மந்தமானநிலைகள் உண்டாகும். இலாபம் குறையும் மறைமுக எதிர்ப்புகளும் அரசு மூலம் சோதனைகளும் உண்ட்ாகும். தொழில் கருவிகளில் பழுதுஉண்டாகும். கூடன் தொல்லை நீடிக்கும். கூட்டுத்தொழில் புரிபவர்கள் கூட்டாளிகளையும் வேலையாட்களையும் அனுசரித்துப் போகவேண்டும். வெளியூர், வெளிநாட்டு பயணம் அவ்வளவு சிறப்பான நற்பலனை ஏற்படுத்தாது.

**உத்தியோகஸ்தர்களுக்கு:** உத்தியோக நிலையில் அதிகாரிகளின் கெடுபிடிகளால் மனவேதனையடைந்த நீங்கள் சற்று அனுசரித்துப்போனால் சுமாரான அமைப்பினை அடையமுடியும். அடிக்கடி விடுப்பு எடுக்க நேரிடும். புதிய வேலைவாய்ப்புக்களில் தாமதமான நிலை ஏற்படும். இடமாற்றம் உண்டாகி குடும்பத்தை விட்டு சிலர் அங்குசென்று அமைவார்கள். பதவி ஊதிய உயர்வுகளையும் செப்டம்பருக்குப் பின்பு சற்று எதிர்பார்க்கமுடியும். எதிலும் நிதானமுடன் செயல்படவேண்டும்.

**பெண்களுக்கு:** மனதில் நிலவிய சஞ்சலங்கள் சற்றே குறையும் குடும்பத்தில் உள்ள பொருளாதார நெருக்கடிகளும் சற்றுக் குறைந்துவிடும். உடல் நலனில் முழுக்கவனம் செலுத்த வேண்டும். சிலருக்கு வயிற்று உபாதைகளை ஏற்படுத்தும் கணவன் மனைவி உறவில் சிறு சிறு வீண் வாக்கு வாதங்களை ஏற்படுத்தினாலும் அனுசரித்துப் போவது நல்லது. திருமண சுபகாரிய முயற்சிகளை செப்டம்பருக்கு பின்பு முயற்சி செய்யலாம்.

**மாணவ மாணவியருக்கு:** கல்வியில் ஏற்பட்ட மந்தமான நிலை சற்று மாறும். கவனமுடன் படித்து முன்னேறமுடியும். நல்ல நண்பர்கள் விலகியதால் மனம் நொந்த நீங்கள் அவர்களிடம் மீண்டும் நட்பு பாராட்ட முயற்சியைமேற்கொள்வீகள். வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்துவதை காதுகொடுததுக்கேற்பது மிகவும் நனமைதரும். பெற்றோர்களின் பேச்சைக்கேட்டு நடக்க வேண்டும். வண்டி வாகனம் உபயோகிப்பவர்கள் மிகவும் கவனமாக செயல்படவேண்டும்.

**கலைஞர்களுக்கு:** உங்களின் படைப்புகள் சிறப்பானதாக அமைந்தாலும் உரிய பலன்கிடைக்க தாமதம்ஏற்படும் புதிய படவாய்ப்புகள் மறைமுக போட்டியாளர்களால் இழக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்படும். ஏற்கனவே ஒப்புக்கொண்ட வாய்ப்புகளை தக்கசமயத்தில் முடித்துத் தருவதில் காலதாமதம் உண்டாகும். எதிலும் நிதானமாக செயற்படவேண்டும்.

**பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு:** அரசியலில் வீண் வார்த்தைகளை பேசாமல் ஒதுங்கிப்போவது மிகவும் நற்பலனை ஏற்படுத்தும் தலைவரின் அன்பைப் பெற கூடுதலாக மக்கள் பணிகளில் ஈடுபடவேண்டிய கட்டாயம் ஏற்படும் உடன் இருப்பவர்களின். தொல்லைகள் கூடும்.

**தொழிலாளிகளுக்கு்:** முதலாளி தொழிலாளி இடையில் நிலவிவந்த இறுக்கமான நிலைகள் சற்றே குறையும். உங்களுடைய உழைப்பிற்கு ஏற்ற ஊதியம்பெற தாமதம் உண்டாகும். இரும்புவேலை செய்பவர்கள் சற்று எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும்.

**சனிபகவான் குரு சாரத்தில் புனர்பூசத்தில்**
**27.06.2005முதல் 21.07.2005வரை**

இக்காலமும் உங்களுக்கு அதிக சோதனைகளை எதிர்கொள்ள நேரிடும் மனதில் அமைதி இருக்காது. மனதைக் குழப்பிக்கொண்டு உடல் நலனையும் கெடுத்துக்கொள்வீர்கள் மருத்துவச்செலவுகள் மனைவி மற்றும் பிள்ளைகளின் வழியில் அதிகரிக்கும். குடும்பத்தில் பொருளாதாரநிலையில் பற்றாக்குறைகள் ஏற்பட்டு கடன் வாங்கும் சூழ்நிலையும் கணவன் மனைவிஇடையே சண்டை சச்சரவுகளையும் ஏற்படுத்தும். உற்றார் உறவினர்களால் திருமண சுபகாரியம் தடைப்படும். கொடுக்கல் வாங்கலில் சிக்கலில் சிக்கித்தவித்திட நேரிடும். தொழில் வியாபாரம் மிகவும் மந்தமானநிலையை அடைந்து லாபம் குறையும். தொழில் கருவிகள் பழுதடையும். வண்டி வாகனம் செலவினை ஏற்படுத்தும். உத்தியோக நிலையில் அதிகாரிகள் கெடுபிடியும் அதிகமான உடல் உழைப்பு செய்யவும் நேரிடும். அமைதி குறையும்.

**சனிபகவான் சனி சாரத்திரல் பூசத்தில்**
**22.07.2005முதல் 19.11.2005வரை**

இக்காலத்தில் சிறு சிறு உடல் உபாதைகளை எதிர்கொள்ள நேரிட்டாலும் படிப்படியாக உடல் நலம் தேறிவிடும். மருத்துவச்செலவுகள் குறையும். மனைவியின் கர்பக்கோளாறு விலகும். பிள்ளைகளால் நிலவிய மனச்சஞ்சலம் சற்றே குறைந்து மனஅமைதி உண்டாகும். குடும்பத்தில் கணவன் மனைவியிடையே நிலவிய கருத்துவேறுபாடுகள் குறைந்து ஒற்றுமை நிலவும். பொருளாதார நிலையில் படிப்படியாக தடைகள்விலகி ஓரளவு அனுகூலப்பலன் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் சுமாரான அனுகூலம் ஏற்படும். முன்ஜாமின் தவிர்க்க வேண்டும். தொழில் வியர்பாரம் கூட்டுத் தொழில் கமிஷன் ஏஜென்ஸி கான்டிராக்ட் போன்றவை சுமாரான ஏற்றம் ஏற்படுத்தும். போட்டி பொறாமைகளை சமாளித்துவிடுவீர்கள். உத்தியோகநிலையில் அதிகாரிகளையும் உடன் பணி புரிபவர்களையும் அனுசரித்துப் போனால் சிறப்பான அனுகூலம் அடையமுடியும்.

**சனிபகவான் வக்ரகதியில்**
**20.11.2005முதல் 06.04.2006வரை**

இக்காலத்தில் உங்களின் தேக ஆரோக்கியம் மிகவும் சிறப்புடன் அமையும். நலல் ஏற்றத்தையும் முன்னேற்றத்தையும் பெறுவீர்கள் குடும்பத்தில் மங்களகரமான சுபகாரியங்கள் அமைந்து புரிப்படைவீர்கள் புத்திரர்களின் வழியில் மிகவும் சிறப்பான அனுகூலப்பலனையும் பெருமைகளையும்அடைவீாகள் பெண்களுக்கு குடும்பவாழ்வில் சந்தோஷமும் புத்திரபாக்கியமும் கணவருடன் ஒற்றுமையும் மிக சிறப்பாக இருக்கும். ஆடை ஆபரணம் சேரும் சிலருக்கு புர்வீக வம்பு வழக்குகள் வெற்றிமேல் வெற்றியை ஏற்படுத்தும். வீடு வண்டி வாகன யோகமும் அமையும். வியாபாரிகளுக்கு வியாபாரம் மிகவும் சுறு சுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்று லாபம் கூடும். தொழில் அபிவிருத்தி புதிய தொழில் தொடங்குவதிலும் ஆர்வமுடன் செயற்பட்டு வெற்றி ஏற்படும். பதவி ஊதிய உயர்வுகள் அற்புதமாக அமையும். புரிப்பு உண்டாகும்.

**சனிப்கவான் சனி சாரத்தில் பூசத்தில்**
**07.04.2006 முதல் 27.07.2006வரை**

நீங்கள் நினைத்தபடியே செயல்படுவதில் சிறு சிறு இடையுறுகள் உண்டாகும். உடல் நலனில் உஷ்ண சம்பந்தமான உபாதைகள் ஏற்பட்டு பின்பு மறையும். சிறிதளவு மருத்துவச் செலவுகளை எதிர்கொள்வீர்கள். மனைவி மற்றும் பிள்ளைகள்நலமடைவார்கள். பொருளாதாரநிலையில் படிப்படியான உயர்வுகள் உண்டாகும். வரவேண்டிய பாக்கிகள் தாமதித்துவரும் கடன்களை பிற்பாதியில் அடைத்து நிம்மதியடைவீர்கள். தொழில் வியாபாரநிலையில் மறைமுகப் போட்டிகள் குறைந்து படிப்படியான லாபமும் முன்னேற்றமும் ஏற்படும். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளையும் வேலையாட்களையும் சற்று அனுசரித்துப்போனால் சிறப்பான ஏற்றம்பெற்றுவிடமுடியும். உத்தியோகநிலையில் அதிகாரிகளின் கெடுபிடிகள் விலகி திருப்தியுடன் பணிபுரிவீர்கள். தாமதித்து பதவி ஊதிய உயர்வுகள் அமையும். மாணவர்களின் கல்வியில் ஏற்றமுண்டாகும்.

**சனி பகவான் புதன் சாரத்தில் ஆயிலியத்தில்**
**28.07.2006 முதல் 2.12.2006வரை**

இக்காலத்தில் நீங்கள் எதையும் தைரியாமாக்வும் சுறுசுறுப்புடன் செய்து முடித்துவிடுவீர்கள். மனதில் உற்சாகம் கூடும். கணவன் மனைவி உறவில் சிறப்பானஒற்றுமையும் அன்னியோன்னியமும் உண்டாகும். மருத்துவச்செலவுகள் மிகவும் குறையும். மனைவி மற்றும் பிள்ளைகள் சிறப்பான நலமுடன் சுபீட்சமாவார்கள். பொருளாதார நிலையில் பணவரவுகள் சரளமாக வரும். வீட்டைக் கட்டி குடிபுகும் அமைப்பு வண்டி வாகனம் வாங்கிடும் யோகம் புர்வீகவழியில் அசையாச் சொத்து சேர்க்கையும் சந்தோஷத்தை ஏற்படுத்தும் தொழிலில் வியாபாரத்தில் சிறப்பான ஏற்றமும் முன்னேற்றமும் உண்டாகும் கூட்டுத்தொழிலில் நல்ல நம்பிக்கை நாணயம் ஏற்படும். உத்தியோகநிலையில். பதவி ஊதிய உயர்வையும் விரும்பிய இடமாறுதலையும் பெறுவீர்கள். புதிய வேலைவாய்ப்புக்கிட்டும். மாணவர்களுக்கு வெற்றிமேல் வெற்றிகிட்டும்.

**சனி பகவான் வக்ரகதியில்**
**03.12.2006முதல் 19.04.2007வரை**

உங்களுகளின் சோதனை அதிகமாகும் காலமாகவே அமையும். மனதில் கலக்கம் உண்டாகும். உடல் நலம் கடுமையாகப் பாதிக்கும் .சிலருக்கு உடலில் அறுவைச் சிகிச்சை செய்ய நேரிடலாம். எனவே சற்று நிதானமாகவும் கவனமாகவும் செயல்படவேண்டும். வண்டி வாகனம் பயன்படுத்துபவர்கள் உசாராக செயல்படவேண்டும் மனைவி மற்றும் ,பிள்ளைகளால் மருத்துவச் செலவுகளும் வீண் பயணங்களால் அதிக அலைச்சலும் ரென்சன் உண்டாகும். பொருளாதார நிலையில் சோதனைகளை எதிர்கொள்வீர்கள். கடன்களால் நெருக்கமானவர்களை விரோதியாவார்கள். தொழில் வியாபாரம் போட்டி பொறாமைகளால் நலிவடையும் இலாபம் இருக்காது. கூட்டுத் தொழில் கமிஷன் ஏஜென்சி கான்டிராக்ட் போன்றவற்றில் அரசு மூலம் சோதனைகளை அடைவீர்கள். உத்தியோக ரீதியாக எதிர்பாராமல் இடமாற்றம் ஏற்பட்டு அலைய நேரிடும். புதிய வேலைகிட்டாது.

**சனிபகவான் புதன் சாரத்தில் ஆயிலியத்தில்**
**20.04.2007முதல் 05.08.2007வரை**

இக்காலத்தில் உங்களுக்கு மிக கடுமையான சோதனைகள் உண்டாகும். நெருக்கமானவர்களை இழக்கவும் நேரிடலாம். எடுக்கும் காரியம் யாவும் தடைப்படும். உடல்நலம் அதிக பாதிப்படையும் அதிக மருத்துவச் செலவுகளையும் வீண் விரயங்களையும் சந்திப்பீர்கள். மனைவிக்கு கற்பக்கோளாறுகள் கணவன் மனைவியிடையே அதிகமான சண்டை சச்சரவுகளை எற்படுத்தும். பொருளாதார நிலையில் சாதகமற்ற பலன்கள் பற்றாக்குறை கடன்தொல்லைகளும் ஏற்படும். திருமண சுபகாரியம் தடைப்படும். தொழில் வியாபாரநிலையில் நலிவும் லாபம் இல்லாத சூழ்நிலைகளும் ஏற்படும். கூட்டுத் தொழில் புரிபவர்களுக்கு கூட்டாளிகளுடன் வீண்கருத்து வேறுபாடுகளால் பிரியும் படியாகநேரிடும். மாணவர்கள் கல்வி தடைப்படும். உத்தியோகநிலையில் அதிக சோதனை உண்டாகும்.

**அதிர்ஷ்ட குறிப்புகள**

அதிர்ஷ்ட கிழமை: புதன் வெள்ளி.
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, வெள்ளை
அதிர்ஷ்ட தெய்வம்: விஷ்ணு
அதிர்ஷ்ட திசை: வடக்கு
அதிர்ஷ்ட கல்: மரகதம்

(தொடரும்)

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல:13 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

வினாத்தாள் - I நேரம்: 45 நிமிடங்கள்


❖ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன.

❖ தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

♦ மிகவும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


♦ 01 முதல் 02 வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள அடங்கல் வரிப் படங்களுக்குரிய எண் கூட்டத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(01)




1) A=2, 3, 5, 7, 9 B=2, 4, 6, 8, 10
2) A=2, 4, 6, 8, 10 B=3, 5, 7, 9, 11
3) A=2, 4, 6, 8, 10 B=2, 4, 6, 7, 9

(02)





1) A=2, 3, 5, 7, 9 B=2, 4, 6, 8, 10
2) A=2, 4, 6, 8, 10 B=3, 5, 7, 9, 11
3) A=2, 4, 6, 8, 10 B=12, 14,16, 19,20

♦ 03 முதல் 07 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.


(03) கீழே தரப்பட்டுள்ள உருக்களில் தரப்பட்டுள்ள பருமன்கள் (உயரம்) பொருத்தப்பாடில்லாமல் இருக்கும் உருவின் கீழ்க் கோடிடுக.




(04) கீழே உள்ள விலங்குகளை அவற்றின் பருமன் அடிப்படையில் வரிசைப்படுத்த நடுவில் அமைவது.





(05) உச்சி 4, விளிம்பு 6, முகம் 4 உடைய உரு.




(06) சுவையை அறிய உதவும் புலனங்கம்.
1)கண் 2)காது 3)மூக்கு 4)நாக்கு

(07) உயிரற்ற பொருள்.
1)தாவரம் 2)விலங்கு 3)பறவை 4)கதிரை

♦ சுருக்கமான விடை தருக.




(08) இவ்வுருவில் சதுர வடிவமான முகங்கள் எத்தனை உண்டு?
------------------------

(09) இவ்வுருவில் செவ்வக வடிவமான முகங்கள் எத்தனை உண்டு?
------------------------

(10) இவ்வுருவின் சதுர வடிவ முகத்தின் ஒருபக்க நீளம் எத்தனை மீற்றா?
------------------------

(11) இவ்வுருவில் உள்ள செவ்வக வடிவான முகம் ஒன்றின் நீளம், அகலம் ஆகியவற்றை எழுதுக?
நீளம் -------------------- அகலம் --------------------

(12) இவ்வுருவின் கணிதப் பெயர் யாது?
------------------------

(13) **100-50-25** என்பதனைச் சுருக்க வரும் விடையின் உரோமன் இலக்கப் பெறுமானம் என்ன?
------------------------

(14) இலங்கையின் வரைபடத்தை வரைந்தவர் பெயரை எழுதுக?
------------------------

(15) எல்லா மதத்தவரும் போற்றி வழிபடும் இலங்கையில் உள்ள மலை ஒன்றின் பெயரை எழுதுக?
------------------------

♦ கீழே சில வாக்கியங்கள் தரப்படுகின்றன. அவற்றோடு பொருந்தக்கூடிய பழமொழிகளைத் தருக.

(16) "ஒரு காரியத்திற்கு மூலமானவனை அறியாது, காரியம் செய்பவன் மேல் கோபப்படுவது தவறு"
1)சுடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
2)எய்தவன் இருக்க அம்பை நோவானேன்.

(17) "பல தடவைகள் முயன்றால் கடினமான காரியமும் கைகூடும்"
1)அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
2)காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

(18) "நடை, உடை, பாவனைகளை மாற்றிக்கொண்டாலும் அடிப்படை இயல்பு மாறாது"
1)கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் ஆடிப் பார்த்தது.
2)உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

(19) "வீண் விரயமாயினும் அதனை அளவிட்டுச் செய்தல் வேண்டும்"
1)ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
2)அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.

(20) "பெரியவர்களும் சிலவேளை பிழை விடுவதுண்டு"
1)குறைகுடம் தளும்பும், நிறைகுடம் தளும்பாது.
2)ஆனைக்கும் அடிசறுக்கும்.

♦ கீழே சில ஆங்கில எழுத்துக்கள் தரப்படுகின்றன. அவற்றைச் சரியாக ஒழுங்குபடுத்த கருத்து நிறைந்த சொல்லொன்று கிடைக்கும் அதனை எழுதுக.

(21) O , K , M , Y , N ------------------------
(ஒரு விலங்கு)

(22) R , O , E , T , H , B , R ------------------------
(ஒரு உறவு)

♦ கீழே உள்ள எண்கள் ஏறுவரிசையில் அமையத்தக்கவாறு அம்புக்குறியால் இணைக்க.

(23)

90 100
80
138
20

(24)

XXIII XXX
VIII
IX X XV

♦ இப்பந்தியை வாசிக்க.

சிற்றுண்டிச்சாலை ஒன்றில் வடை, வாய்ப்பன், மோதகம், இடியப்பம், பிட்டு ஆகியன இருந்தன. அங்கு சென்ற 30 பேருள் 5 பேர் வடையும் பால் தேனீரும் சாப்பிட்டனர். வடை, பால் தேனீர் எடுத்தோரைப் போல் மூன்று மடங்கினர் வடை மட்டும் சாப்பிட்டனர். 8 பேர் பால் தேனீர் மட்டும் அருந்தினர்.

(25) இவற்றில் நீராவியில் அவித்துச் சமைக்கப்படும் காலை உணவுகளை இரண்டின் பெயரை எழுதுக?
1)------------------------ 2)------------------------

(26) வடை மட்டும் சாப்பிட்டவர்கள் எத்தனை பேர்?

(27) வடை, பால் தேனீர் ஆகிய உணவுகளை எடுக்காதோர் எண்ணிக்கையை எழுதுக?
------------------------

♦ வித்தியாசமான சேர்மானத்தின் கீழ்க் கோடிடுக.


(28)
1)ஆடையணி - அலங்காரம்
2)அவதாரம் - பிறப்பு
3)கூடுதல் - பிரிதல்

(29)
1)கத்தி - கூர்மை
2)புத்தகம் - பக்கம்
3)பென்சில் - மை


(30)
1)சுவை - நாக்கு
2)மணம் - மூக்கு
3)பார்வை - குருடு

♦ 31-32 ஆகிய வினாக்களின் கூடுகளுக்குள் காட்டப்பட்டுள்ள எண்களுக்கிடையிலான தொடர்பினை விளங்கிக்கொண்டு வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.


(31)





(32)




(33) கீழ்வரும் திண்ம உருக்களில் தட்டையான மேற்பரப்பையும் வளைந்த மேற்பரப்பையும் உடைய உரு.





(34)




இங்குள்ள இரு வட்டங்களுக்கும் பொதுவாகக் காணப்படும் எண் எது?
1)4 2)2
3)3 4)4,3

(08ஆம் பக்கம் பார்க்க...)

(07ஆம் பக்கத் தொடர்ச்சி...)

(35) 

அருகே தரப்பட்டுள்ள உருக்களின் பரப்பளவுகள் தொடர்பான கூற்றுக்களில் தவறான கூற்றின் கீழ்க் கோடிடுக.

1)வட்டத்தின் பரப்பளவு > முக்கோணியின் பரப்பளவு
2)சதுரத்தின் பரப்பளவு > வட்டத்தின் பரப்பளவு
3)முக்கோணியின் பரப்பளவு > சதுரத்தின் பரப்பளவு

**• கீழே கூடுகளுக்குள் சில நிகழ்வுகள் தரப்பட்டுள்ளன. ஆனால் அவை சரியான ஒழுங்கிற்கு அமையத் தரப்படவில்லை. அவற்றை சரியாக ஒழுங்கு படுத்த அமையும் விடையின் இலக்க வரிசையின் கீழ்க் கோடிடுக.**

(36)
1)மக்கள் தமது வேலைகளில் சுறுசுறுப்பாக இருந்தார்கள்.
2)நட்சத்திரங்கள் மின்னும் இரவு வான் அழகானது.
3)கிழக்கு வானிலே சூரியன் உதயமானான்.

1) 3, 2, 1
2) 2, 3, 1
3) 1, 2, 3

(37)
1)பிள்ளைகள் எல்லோரும் எழுந்து காலை வணக்கம் தெரிவித்தனர்.
2)ஆசிரியர் மிகவும் தெளிவாகப் பாடம சொல்லிக் கொடுத்தார்.
3)ஆசிரியர் கம்பீரமாக வகுப்பறைக்குள் நுழைந்தார்.

1) 3, 2, 1
2) 2, 1, 3
3) 3, 1, 2

(38)
1)மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது.
2)சந்தியில் நாய் ஒன்று குறுக்கே பாய விபத்து நிகழ்ந்தது.
3)மோட்டார் சைக்கிள் ஒன்று விரைவாக வந்தது.

1) 1, 3, 2
2) 2, 1, 3
3) 3, 1, 2

(39)
1)அருணியின் உறவினர்களும் நண்பர்களும் வந்தனர்.
2)அருணியின் நான்காவது பிறந்ததினம் இன்றாகும்.
3)அவர்கள் பரிசுப் பொருட்கள் கொடுத்து வாழ்த்திச் சென்றனர்.

1) 2, 3, 1
2) 1, 3, 2
3) 2, 1, 3

(40)
1)பால் தேநீரை தன் நண்பர்களுடன் சேர்ந்து அருந்தினான்.
2)வரன் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றான்.
3)வெறுமையாக இருந்த ஆசனம் ஒன்றில் அமர்ந்தான்.

1) 2, 3, 1
2) 3, 2, 1
3) 2, 1, 3

# தரம் – 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

### வினாத்தாள் இல:11

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

01.ஜெ.மதுஷனா — யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்.
02.த.சூரியப்பிரியா — யா/சென்மேரிஸ் வித்தியாலயம்.
03.பு.பிருந்தாபன் — யா/வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி.
04.கு.ஸ.அலெக்ஸ் — யா/மத்திய கல்லூரி.
05.பி.பிரியா — யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்.
06.யோ.கபிர்த்தனா — யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்.
07.அ.ஸ்ரீபன் — யா/மத்திய கல்லூரி.
08.சோ.திரியம்பதி — யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
09.பு.பிரியதர்ஷன் — யா/நவாலி மகா வித்தியாலயம்.
10.வி.பிரியங்கா — யா/ஞானசாரியார் கல்லூரி.
11.ப.மதுரசன் — யா/புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம.
12.செ.துவாரகா — யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்.
13.ச.சாமுவல் — யா/மத்திய கல்லூரி.
14.ம.றஜி — யா/பிளவத்தை அ.மி.த.க.பாடசாலை.
15.கி.தினேசன் — யா/பிளவத்தை அ.மி.த.க.பாடசாலை.
16.ச.நிருசிகா — யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.
17.கு.சுரேன் — யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்.
18.பா.அஜிகரன் — யா/ஏழாலை சைவ. ச.வித்தியாசாலை.
19.கி.மாதுளா — யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடாசலை.
20.ச.போல்ராஜ் — யா/இ.ம.கல்லூரி.
21.த.சானுஜன் — யா/தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்.
22.அ.பாலமுரளிக்கிருஷ்ணா — யா/வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி.
23.ஸ்ரீ.ஸ்னேகா — யா/மானிப்பாய் றோ.க.தக.க பாடசாலை.
24.இ.பகீதரன் — யா/யாழ்.மத்திய கல்லூரி.
25.மு.பிரசண்ணா — யா/ஞானசாரியர் கல்லூரி.
26.சொ.துசியவேணி — யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்.
27.ஜெ.சுஜனிகா — யா/மானிப்பாய் மெமோறியல் நவோதயா கல்லூரி.
28.செ.சஜீதா — யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.
29.ச.திலகஷி — யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
30.சி.கவிஜா — யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்.
31.இ.யாழினி — யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
32.வி.சிந்துஜா — யா/இணுவில் மத்திய கல்லூரி.
33.கி.விதுசா — யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.
34.செ.சுலக்சன் — யா/மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்.
35.தி.திவ்வியா — யா/ஞானசாரியார் கல்லூரி.
36.பா.கௌசனா — யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்.
37.ஜெ.பமிலா — யா/புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
38.கு.சரண்யா — யா/ஞானசாரியார் கல்லூரி.
39.க.கீதா — யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.
40.மு.சன்ஜிகா — யா/கட்டைவேலி மெதடிஸ்மிசன் தமிழ்கலவன். பாடசாலை.
41.மு.முருகேசு — யா/ஞானசாரியார் கல்லூரி.

மத்திய – மாகாண

# அரச சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் சங்கத்தின் 6 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மத்திய - மாகாண அரச சுருக்கெழுத தாளர் தட்டெழுத்தாளர் சங்கத்தின் 6 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சங்கத்தின் உப தலைவர் சி.இரகுநாதன தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ், யாழ். மாநகர ஆணையார் கலாநிதி க.குணராசா, பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா மற்றும் யாழ்.மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் அ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கூட்டத்தில், முன்னறிவித்தபடி பின்வரும் பிரேரணைகள் பிரேரிக்கப்படவுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் இ.இரத்தினசிங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய,

01/2005 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மறறும் மாகாண பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் மூலம் எழுதுநர், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர், கணக்குப பதிவ்ாளர், களஞ்சியக் காப்பாளர் மறறும் காசாளர் ஆகிய 6 சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தா கள மத்திய - மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குள் உள்ளர்க்கப்பட்டுள்ளனர்.

எழுதுநர் சேவையுடன் இணைந்த சமாந்தர சேவைகளென ஏனைய 5 சேவைகளும் ஏட்டில் எழுதப்படடு இருந்தாலும் நடைமுறையில் அவ்வாறு கணிக்கப்படுவதில்லை. கணனி மறறும் மொழிப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதிலும், கணனிப் பாவனையிலும் கூட எழுதுநர், சேவை தவிர்ந்த ஏனைய சேவையினருக்கு உரிய இடம் அளிக்கப்படாது பாரபட்சம் காட்டப்பட்டு வந்துள்ளது. கணனிப் பயிற்சி வழங்கப்படும்போது தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டுமென 01/2000 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது பெரும்பாலான திணைக்களங்களில் நடைமுறைபபடுத்தப்படவில்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரச உத்தியோகத்தர்களுக்கிடையே காணப்பட்ட வேறறுமைகள், ஏற்றத்தாழ்வுகள் யாவற்றையும் அறவே ஒழிக்கும் நோக்கோடு மத்திய - மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை என்ற புதியதொரு சேவையை உருவாக்கி மேற்கூறிய ஆறு சேவைகளைச் சேர்ந்தவர்களை அச் சேவைக்குள் உள்ளீர்த்ததன மூலம் பொது மக்களுக்குச் சிறந்த சேவையை தாமதமின்றி வழங்கக்கூடியவாறு நடவடிக்கை மேற்கொண்ட பொதுநிர்வாக அமைச்சர், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் ஆகியோருக்குத் தனது நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்ளுவதென இச்சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

மத்திய - மாகாண அரச பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 01/2005க்கு அமைவாக எழுதுநர், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர், கணக்குப் பதிவாளர், களஞ்சியக் காப்பாளர் மறறும் காசாளர் ஆகிய 6 சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் தற்போது மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டிருப்பதனால தத்தமது முதுமுறையில் பாதிபபு ஏற்படுமென அனைவரும் ஐயமுற்றுள்ளனர்.

இதனால் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு 1 மற்றும் அதி சிறப்பு வகுப்பு ஆகிய தரங்களைச் சேர்நதவர்களின் முதுமுறைப்பட்டியலை உடனடியாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மறறும் மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆகியோரைக கோருவதென இச்சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

அத்துடன் மத்திய மாகாண அரச சுருக்கெழுததாளர் தட்டெழுத்தாளர் சங்கம் எனப் பெயர்கொண்டு இயங்கும் எமது சங்க உறுப்புரிமையைப் பெற்றிருந்த மத்திய - மாகாண அரச சுருக்கெழுத்தாளர்கள் மற்றும் தட்டெழுத்தாளர்கள் தற்போது மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டிருப்பதனால எமது சங்கத்தின் பெயரை 'மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கம்' எனப் பெயர்மாற்றம் செய்வதெனவும் மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைகுள் உள்ளீர்க்கப்படடிருக்கும் ஏனைய சேவைகளைச் சேர்ந்த அனைவரையும் எமது சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்த்து சங்கத்தின் பலத்தை அதிகரிப்பதெனவும் இச்சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது எனவும் பொதுச் செயலாளர் இ.இரத்தினசிங்கம் அச் செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து இக் கூட்டத்தில் நடப்பாண்டுக்குரிய புதிய நிர்வாகசபை தொிவு செய்யப்படவுள்ளது. (ற)


# மஹோற்சவம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை சிவன் கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜுலை 11ஆம் திகதி காலை 8மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 7மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுளளன. (ற-35)

# வினாத்தாள் 11 இன் விடைகள்

**01.** சமனல்ல **02.** சமனல்ல **03.** குறைவு **04.** அதிகமானது
**05.** சமன் **06.** (1) **07.** (2) **08.** (1) **09.** (3)
**10.** (3) **11.** (2) **12.** (1) **13.** (2) **14.** (2)
**15.** (1) **16.** வீடு **17.** கெட்டிக்காரன் **18.** (3) **19.** (2)
**20.** (3) **21.** (2) **22.** ரூபா 175.00 **23.** ரூபா 7.00
**24.** ரூபா 67.50 **25.** நிமிடக்கம்பி **26.** 6 **27.** 2000,2004 **28.** (1)
**29.** (2) **30.** (3) **31.** (2) **32.** 
**33.**  **34.** (4) **35.** 1) ✔ 2) ✔ 3)X 4)X
**36.**  **37.** (3) **38.** (4) **39.** (3) **40.** (2)

# 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 13

மாணவர் முழுப்பெயர் : ..................................

பாடசாலையின் பெயர் : ..................................

வீட்டின் முகவரி : ..................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 28.06.2005 இற்கு முன் அனுப்பிவைக்கவும. உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 13
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ. திருநாவுக்கரசு 28

1972ஜனவரி 17இல் தமிழரசு தமிழ்க்காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் வல்வெட்டித்துறையில் சில பெரியார்கள் எடுத்த முயற்சியின் பயனாகக் கூடி ''தமிழர் கூட்டணியை'' உருவாக்கினர். பின்னர் இது தமிழர் விடுதலைக் கூட்டணி என்னும் பெயரைப் பூண்டது.

1972இல் மே 22இல் புதிய அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், தமிழ் பிரதேசம் எங்கனும் ஆர்ப்பாட்டங்களும் கடையடைப்புகளும் நடைபெற்றன. இது சம்பந்தமாக 72 தமிழர்கள் கைதாகினர் எஸ். ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து புதிய அரசியல் யாப்பின் நகலுக்குத் தீயிட்டுக் கொழுத்தியதன் மூலம் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான தமிழத் தேசியவாதத்தின் போக்கை மக்கள் மயப்படுத்த முனைந்தார். 25.5.72இல் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பெருமளவுக்கு தமிழ் மக்கள் கலந்துகொண்டனர்.25 ஜுன் 1972இல் தமிழர் விடுதலைக் கூட்டணியானது தமிழர்களின் உரிமைகளை வலியுறுத்தும் ஆறு அம்சக் கோரிக்கையை நிறைவேற்றி அரசாங்கத்துக்கு அனுப்பியது. அது அரசாங்கத்தினால் அசட்டை செய்யப்பட்டதன் விளைவாக அதன் அடிப்படையில் உலகுக்கு தமது நிலையை வெளிக்காட்ட எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 3.10.1972இல் துறந்தார். இவரது பதவி விலகலினால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்ப பலமாதங்களை அரசு இழுத்தடித்ததாயினும் மீண்டும் நடாத்தப்பெற்ற இடைத்தேர்தலில் செல்வநாயகம் அவர்களே பெரு வெற்றி பெற்றமை தமிழ் பேசும் மக்களது அப்போதைய இனவுணர்வின் அடையாளமே எனலாம்.

ஏற்கனவே 1970ஆம் ஆண்டளவில் ஐக்கிய முன்னணி அரசு கடைப்பிடிக்கத் தொடங்கிய ''தரப்படுத்தல்'' கொள்கையினால் விரக்தியுற்ற யாழ்ப்பாண மாணவர்கள் டிசம்பர் 1970இல் ''மாணவர் பேரவை'' யினை நிறுவியதுடன் தரப்படுத்தலை எதிர்த்து பேரணி ஒன்றையும் நடாத்தியிருந்தனர். அவர்களது செயற்பாடுகளின் தீவிரத்தினால் 1973 பெப்ரவரி 22இல் மாணவர் பேரவைத்தலைவரும் 9.3.1973இல் 40ற்கும் மேற்பட்ட மாணவர் பேரவை இளைஞர்களும் அரசினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கிடையில் 28 ஜனவரி 1973இல் ''தமிழ் இளைஞர் பேரவை'' ஆரம்பிக்கப்பட்டது. 14.3.73ஆம் திகதியன்று மாணவர் கைதுகளையும் அரச ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து பாடசாலை பகிஷ்கரிப்பினையும் உண்ணாவிரதத்தினையும் தமிழர் விடுதலைக் கூட்டணி நடாத்தியது. இதன் தொடர்ச்சியாக தமிழ் இளைஞர் பேரவையினால் 20.5. 1973இல் மருதனார் மடத்தில் இருந்து சட்ட மறுப்பு ஊர்வலமும் 11.9.1973இல் தொடங்கி 5 நாள் உண்ணாவிரதமும் நடாத்தப்பட்டு தமிழர் தம் இனவுணர்வுகள் தூண்டப்பட்டன.

தமிழ் கூறும் நல் உலகம் அனைத்திலும் வாழும் தமிழர் மனங்களில் துயர் தோய்ந்த நாளாக 1974 ஜனவரி 10 அமைந்தது எனலாம். 4ஆவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு இலங்கைத் தமிழர்கள் வாழ்விலே இது வரை காலமும் கண்டிராத புத்தெழுச்சியுடன் ஜனரஞ்சகமாகக் கொண்டாடப்பட்டது. அதன் இறுதி நாள் நிகழ்வான நன்றி தெரிவிக்கும் நாள் அன்று தோற்றுவிக்கப்பட்ட அசம்பாவிதங்களினால் தமிழர்கள் கொல்லப்பட்டமை அரசின் மீதான கசப்புணர்வுகளை தோற்றுவித்ததில் சந்தேகமே இல்லை. இந்த நிகழ்ச்சியின் பதிவுகள் தமிழர் தம் மனங்களில் நிலைபெற்றுவிடும் தன்மை வாய்ந்தவை என்பது உண்மையாகும்.


6.10.1974 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினால் திறந்து வைக்கப்பட்டமையை ஒட்டி 4,5,6ஆம் திகதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதும், 1975இல் . குடியரசுதினத்தை முன்னிட்டு தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை இணைந்து சட்ட மறுப்பு நடாத்தியதும் இதன் விளைவாக தமிழ் இளைஞர் பேரவை கூட்டணியின் அங்கமானதும் அரசியல் சூழ்நிலைகளின் உந்தல்களாகும். 1975இல் ஜூலை 27அன்று யாழ்ப்பாண மாநகர மேஜர் அல்பிறட் துரையப்பா கொலையுண்டதை தொடர்ந்து பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டமையும் 1976இல் புத்தளம் பள்ளிவாசலில் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த துப்பாக்கி பிரயோகங்களும் சிறுபான்மையோர் சிந்தனையில் மாற்றங்களை வலியுறுத்தின.

இதுவரை காலமும் சிங்கள அரசியல்வாதிகள் தங்களது பெரும்பான்மை பலத்தின் கரங்களினால் சிறுபான்மை தமிழ் பேசும் மக்களது உரிமைகளையும் நலன்களையும் படிப்படியாக சூறையாடினர் எனக் கருதிய தமிழ்த்தலைவர்கள் தாங்கள் இதுவரை காலமும் கட்டி வளர்த்து வந்த தமிழ்த்தேசிய வாதத்தின் உச்ச கட்டமாக ''தனி நாடு'' அமைத்து வாழ்வதே உகந்த வழி என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டதாக உணர்ந்தனர். 1976ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் முதன் முதலாக தமிழ் ஈழப்பிரேரணையை தமிழர் விடுதலைக்கூட்டணி கொண்டு வந்தது. அத்துடன் 14.5. 1976இல் பண்ணாகத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணி மாநாட்டில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

''ஒவ்வொரு தேசிய இனத்தினதும் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமும் சுயாதிக்கமும் கொண்ட மதச் சார்பற்ற சோசலிசத் தமிழ் ஈழ அரசை மீட்டெடுக்கவும் கட்டி அமைக்கவும்'' வட்டுக்கோட்டைத் தீர்மானம் முடிவெடுத்தது. இந்த தமிழீழக்கோரிக்கையின் துண்டுப்பிரசுரங்களை 1976ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்கியமைக்காக சில தமிழ்த் தலைவர்கள் (4 பேர்) அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டன.அவர்கள் மீதான ''ட்ரயல் அட் பார்'' வழக்குவிசாரணை 18.6.1976இல் ஆரம்பமானதும் எஸ். ஜே.வி.தலைமையில் ஜி.ஜி. பொன்னம்பலம், எம்.திருச்செல்வம் உட்பட 80க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் அவர்களுக்காக வாதாட முயன்றதும் ''ஈழத்தமிழர் இறைமை'' பற்றிய திருசெல்வத்தின் ஆழ்ந்த கருத்தூட்டல்களும் இறுதியில் அரசு நால்வரையும் விடுதலை செய்தமையும் நாடறிந்த சம்பவங்களாகும். எம்.திருச்செல்வம், ஜி.ஜி.பொன்னம்பலம் ஆகியோரது மறைவுகளைத் தொடர்ந்து 27 ஏப்ரல் 1977இல் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் காலமானார். இதன் பின்னர் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியானது தமிழ் மக்களின் பெரும்பான்மை தொகுதிகளை கைப்பற்றியதுடன் எதிர்பாராத விதமாக பாராளுமன்றத்திலும் பிரதமர் எதிர்க்கட்சியாகும் வாய்ப்பினை 3.6.1977இல் பெற்றுக்கொண்டது.இலங்கையின் ஒன்று பட்ட நிலைமையை மாற்றிப் புறம்பானதோர் இராச்சியத்தை தாபிக்கும் வண்ணம் தமிழ் மக்களின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட கட்சியானது பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைமையை அணி செய்தது. பெரும்பான்மை சிங்கள -பௌத்தரிடையே கூரூரமான உணர்வுகளை வருவிக்கவே செய்தது. அ.அமிர்தலிங்கம் அவர்களே எதிர்க்கட்சித் தலைவராய் இருந்தமை கூடப் பலருக்கு கசப்பூட்டுவதாகவும் அமைந்ததெனலாம்.

தமிழ்த்தேசிய வாதத்தின் படிமுறை வளர்ச்சியானது மேற்கூறிய அரசியல் வரலாற்றினூடு வெளிப்படுத்தப்படும் வேளையில் இத்தகைய மிதவாத போக்கிற்கு மாறாக கிளர்ந்தெழுந்த தமிழ்த் தீவிரவாதத்தின் செயற்பாடுகளையும் நாம் அவதானித்தல் அவசியமானதாகும். ஏனெனில் 1977இல ஆட்சிப்பீடம் ஏறிய ஐ.தே.க.அரசாங்கமானது தீவிரவாதத்தின் பல்துறைச் செயற்பாடுகளையும் எதிர்நோக்க வேண்டியிருந்தமை. கண்கூடாக இத்தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைப் பயங்கரவாத கண்ணோட்டத்தில் ஆளுகின்ற பீடத்தினர் பல்வேறு சந்தர்ப்பங்களில் அணுகியதும்முண்டு. (தொடரும்)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்
## நயினை நாக பூசணி அம்மன் பாமாலை
### தீர்த்தத் திருவிழா



### நயினைத்தாயே அருள்வாய்

நயினையில் குடிகொண்ட தாயே நாகபூசணி
எம் துயர் துடைக்கும் அருள் தாயே...
ஞானச் சுட ரொளியே நயினையின் பெருநிதியே
நிம்மதியான வாழ்க்கை தந்து நாட்டில்
அமைதியும் சமாதானமும் நிலைக்க அருள்வாய்

இணுவை செந்தமிழன்

### அன்ன பூரணியே சரணம்

அகிலத்தின் அகரமானவளே
அரவத்தில் அமர்ந்திருப்பவளே
அலைகடலின் ஆர்ப்பரிப்பில்
அகமகிழ்ந்து அருளுபவளே
அம்மா என்றழைத்தவுடன்
அரவணைக்க வருபவளே
அன்னபூரணியே ஆரணியே சரணம்

கி.கிரிஜா, வைமன் வீதி

### நயினைத் தாயே!

காமாட்சி மீனாட்சி கஞ்சதளாய தாட்சி!
தேவி! மகமாரி நீலாயதாட்சி!
சாமுண்டேஸ்வரி சங்கராபரணி!
கலைமகளே! மலைமகளே! அலைமகளே!!
எம் நயினை நாகபூசணி அம்மா தாயே
உந்தன் அருட்கடாட்சமெமக்கெல்லாம்
கிடைக்கச் செய்யம்மா!!

ஜெ.சுபாஷினி

### அடியவர்களுக்கு அருள் பாலித்திடம்மா

அலைகடல் சூழ் நடுவினிலே
ஆனந்தமாய் வீற்றிருக்கும்
நயினையம்பதி நாயகியே!
உந்தன் அழகுத் திருக்கோலம் காண
அவனியெங்கும்-உன்
அடியார் கூட்டம் அலை மோதுதம்மா!
நாடி வந்த நம்மடியார்
நலன் காத்திட
நாடு அமைதி காத்திட...
நல்லருள் பாலித்திடம்மா!

தெ. திலிப், சித்தன்கேணி

### நயினை வாழ் நாகம்மா

இன்னாக் கினியவர் பாராய் தேவி
இயன்றவரை நம்பினோரைக் காப்பாய் தேவி
பொன்னாய் மணியாய் எமக்குக் குவித்தாலும் -உன்
புன்னகையொன்றே போதுமம்மா
மண்ணாசை எமக்கு இல்லையம்மா- எம்
மன்னவள் இம்மண்ணை ஆள நின்னை
மனமார வேண்டுகின்றோம் தாயே
கண்ணாக அவர் வாழ்வில் நின்றிடவே
காணிக்கை யாக்குகின்றோம் எம் உயிரை
சொல்லொணாத்துன்பங்களைக் கண்டுவிட்டோம்
சோதியாய் நயினைவாழ் நாகம் நீயே

இராசநாதன் அறிவொளி

# பேராசான் மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் நினைவுப் பேருரை

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவை ஒட்டி பேராசான் மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்) நினைவாக 30.05.2005ஆம் திகதி "இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச சேவை - ஒப்பீட்டு ஆய்வு, நோர்வே - எத்தியோப்பியா - இலங்கை" என்ற தலைப்பில் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் மற்றும் உப பீடாதிபதி பாலசுப்பிரமணியம் தனபாலன் ஆகியோர் நிகழ்த்திய நினைவுப் பேருரையின் தொகுப்பு.**

# இடைநிலை பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை - ஒப்பீட்டு ஆய்வு நோர்வே - எத்தியோப்பியா - இலங்கை

(தொடர்ச்சி.....) 5

### எத்தியோப்பியாவில் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்

எத்தியோப்பியாவில் பாரம்பரியமாக இளைஞர்கள் தமது கல்வி அல்லது சமூகப் பிரச்சினைகள் பற்றிய வழிகாட்டலையும் ஏனைய ஆலோசனைகளையும் மூத்தோரிடமிருந்து பெறுகின்றனர். சம்பிரதாய மற்றதாக இருந்தபோதும் ஒரு நபரின் பிரச்சினையைப் பொறுத்து ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குவதில் நண்பர்கள், சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் மற்றும் ஒரு குடும்பத்தின் ஏனைய மூத்த அங்கத்தவர்கள் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றனர். பிரச்சினையானது அதிகளவு தனிப்பட்டதாக இருக்குமாயின் குடும்ப அங்கத்தவர்களை விட நண்பர்களிடம் தமது பிரசசினையை அநேகமானோர் கொண்டு செல்வது வழக்கமாகும்.

தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் போன்ற சமய நிறுவனங்களிலுள்ள செல்வாக்குள்ள மனிதர்களும் தமது மதத்தினைப் பின்பற்றுவோருக்கான வழிகாட்டல் சேவைகளை வழங்குவதற்குப் பொறுப்பானவர்களாக உள்ளனர்.

எத்தியோப்பியாவின் கல்வியின் நீண்ட கால வரலாற்றுடன் ஒப்பிடுகையில் எத்தியோபபியாப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் சேவையானது அதனது ஆரம்ப கட்டத்தில் இருந்தது போன்று உள்ளது. இச்சேவை பிரதானமாக இடைநிலைக் கல்விப் பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் வழங்கப்படுகின்றன. பாடசாலைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் வழிகாட்டல் ஆலோசனை வழங்குவோர் பலர் உளவியலில் ஆகக் குறைந்தது ஒருமுதலாவது வகுப்புப் பட்டத்தைக் கொண்டுள்ளவர்களாக இருக்கின்றனர்.

### இலங்கை (Sri Lanka)

#### அமைவிடம்

இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைநதுள்ள அழகான இயற்கை வளம் கொண்ட நாடாக இலங்கை உள்ளது. நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவு தென்னாசியாவில் இந்தியாவுககு அண்மையில் உள்ளது. இது 65610 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. இலங்கையின் பழைய பெயர்கள் தம்பபண்ணி, தப்ரோபேன், செரண்டிப், சீலதுவீபம், சிலோன், இலங்காபுரம், ஈழம் என்பவையாகும். இந்து சமுத்திரத்தின் முத்து, இராஜகுமாரி எனச் சிறப்பிக்கப்படும் இலங்கையின் மத்திய பகுதி அழகான மலைப்பிரதேசங்களைக் கொண்டது. உலகளாவிய இயற்கையான சர்வதேசத் துறைமுகமான திருகோணமலைத துறைமுகமும் இலங்கையிலேயே உள்ளது.

#### கலாசாரம்

பாரம்பரிய கலாசாரங்களைத் தன்னகத்தேயுடைய இலங்கை, சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர்களைக் கொணட நாடாகும். பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றும் மக்கள் இங்கு வாழ்கின்றார்கள். எனவே இங்கு பன்மைக் கலாசார அம்சங்கள் பிரதிபலிக்கின்றன. இக் கலாசார அம்சங்களைப் பின்பற்றும் விழாக்களும் சடங்குகளும் பண்டைய நாள் தொடக்கம் சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றன.

சராசரி எழுத்தறிவு வீதம் 92 சதவீதமாகும். பாரம்பரியமான கலாசாரத்தைக் கொண்ட இலங்கை, சமூக அபிவிருத்தியில அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் முன்னிலையில் உள்ளது. இந்நிலையிலும் இலங்கை வறுமையான உலகின் கடைசி 40 நாடுகளில் ஒன்றாகவுள்ளது. வறுமை மற்றும் தொழிலின்மை ஆகிய பிரச்சினைகளைச் சமாளிக்க பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை குறைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகிய இரண்டையும் இணைத்து அதனூடாக வறுமை ஒழிப்பைத் தீவிரமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெருந்தொகையான அரச சார்பற்ற அமைப்புகளும் பலவித இயல்பான மற்றும் அளவிலான வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. ஆனால் பிரச்சினையின் அளவை ஒப்பிடும் போது தாக்கம் விரிவானதாகவே உள்ளது. இதனோடு வர்த்தக நியதிகளும் திருப்தியாக இல்லை. தொடர்ச்சியான நாணய மதிப்புக் குறைவு மற்றும் உயர் பணவீக்கம் வறுமையின் விரிவை உறுதிப்படுத்துகின்றன.

மேலும், 1970 ஆம் ஆண்டுகளில இருந்து இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் காரணமாகப் பல ஆயிரக்கணக்கானோர் இறந்துள்ளதுடன் பொருள் இழப்புக்களும ஏற்பட்டுள்ளன. இது நாட்டின் அபிவிருத்தியையே சிதைத்துள்ளது. இலங்கையின் பொருளாதாரம் கிட்டத்தட்ட 10 சதவீத தொடர்ச்சியான பாதீட்டுப் பற்றாக்குறை உள்ளதாக இருக்கிறது. மொத்த வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிடடத்தட்ட 20 சதவீதமாக உள்ளதுடன, மொத்த செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீதமாக உள்ளது. நாட்டின் அரசியல் இனப்பிரச்சினைகளைத் தீர்க்கும் வரை இந்நிலையை அபிவிருத்தி செய்ய முடியாதுள்ளது.

#### இலங்கையில் கல்வி முறை

பாரம்பரிய, கலாசாரச் செழுமையைக் கொண்ட இலங்கை 16 ஆம் நூற்றாண்டில் அந்நியரின் காலனித்துவ ஆட்சிக்குட்பட்டு 1948இல் சுதந்திரமடைந்தது. அதிலிருந்து பல கல்விச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் 1972, 1981, 1997இல் நடைமுறைப் படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.

1992 ஆம் ஆண்டு இல்ங்கை தேசிய கல்வி ஆணைக்குழு பொதுக் கல்விச் சீர்திருத்தத்தை நடைமுறைப் படுதத ஆலோசனைகளை முன்வைத்தது. இதன் நோக்கங்களாக,

1.கல்வி வாய்ப்புக்களில் சர்வசன மற்றும் சமத்துவ அடைதற் தன்மையை உறுதிப் படுத்த கல்வியை சனநாயகத் தன்மையானதாக்கல்.

2.தேசிய நோக்கங்களையும், கல்வி நோககங்களையும், குறிக்கோள்களையும் ஒழுங்கமைத்தல்.

3.ஒவ்வொரு தனியாளுக்கும் கல்வி வாய்பபுககளை ஏற்படுத்தலும், அவரின் முழுமையான சமநிலை ஆளுமையை அபிவிருததி செய்தலும்.


4.சமூக, பொருளாதார, கலாசார, சமய மற்றும அரசியல் குறிக்கோள்களைப் பூரணப்படுத தக்கூடிய கல்வியை வழங்கல்.

5.இயற்கைச் சூழலுடன் இணைந்த குடிமககள் வாழ்வுக்கு வழியமைத்தல்.

என்ற வகையில் இச்சீர்த்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**
(பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)
**பாலசுப்பிரமணியம் தனபாலன்**
(உப பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)

இலங்கையின் இன்றைய கல்விபமைப்பு




(தொடரும்....)

# யாழ். மாவட்டத்தில் வருடாந்தம் 300 சயரோக நோயாளர் இனங்காணல்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வருடாந்தம் 300 சயரோக நோயாளிகள் இனங்காணப்பட்டு வருவதாக சயரோக தடுப்பு பிரிவினரின் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தியா மற்றும் வெளிநாட்டவர்களுடனான அதிகரித்த தொடர்புகள் மூலமே இந்த நோய் யாழ்ப்பாண மாவட்டத்தில் வருடாந்தம் பெருகி வருவதாகவும் அறியப்படுகின்றது.

இதேவேளை, மந்திகை ஆதார வைத்தியசாலையில் இயங்கிவருகின்ற மனநோயாளர் பிரிவு எத்தகைய அடிப்படை வசதிகளும் இன்றி இயங்கி வருவதாகத் தெரியவந்துள்ளது.

இப்பிரிவுக்கான நோயாளர்கள் தங்குமிடத்தை அமைப்பதற்கு நெக்கோட் திட்டத்தின கீழ் 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும்கூட, அந்நிதி போதாது எனவும் 150 மில்லியன் ரூபா நிதி தேவையெனவும் தெரிவித்து குறித்த பணி கைவிடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

(அ-16)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதார மையங்கள்

(தென்மராட்சி)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளில் பதின்நான்கு தற்காலிக சுகாதார மையங்களை அமைப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து தரும்படி பிரதி சுகாதார மாகாண அத்தியட்சகர் அலுவலகம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேசத்திலுள்ள சக்கோட்டை, சுப்பர்மடம், திக்கம், பொலிகண்டி ஆகிய நான்கு இடங்களில் தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் சுகாதார மையங்கள் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேசமயம், கியூமெடிக்கா, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் போத்துக்கல்லைச் சேர்ந்த மெடிக்கோ டு மொன்டோய் ஆகிய மூன்று நிறுவனங்கள் வடமராட்சி வடக்கில் நடமாடும் மருத்துவ சிகிச்சை அலகு கொன்றை நடாத்திவருகின்றன என்றும் தெரிய வருகின்றது.

(அ-16)

# ஒப்பந்தம் கையெழுத்தாவதில் இந்திய அரசு உறுதி

இலங்கை - இந்தியா இடையேயான இராணுவ ஒப்பந்தம் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் எதிர்ப்பை மீறி உறுதியாகக் கையெழுத்தாகும் என்று இந்திய அரசு அதிகாரிகள் கூறியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை.- இந்தியாவிடையேயான இராணுவக் கூட்டுறவு ஒப்பந்தம் சம்பிரதாய பூர்வமாகவும சட்ட நடைமுறைகளின் வடிவமாகவும் இல்லையென்றாலும் இந்தியா - இலங்கையிடையே இந்த ஒப்பந்தம் தொடர்பான இறுதி முடிவு எட்டப்பட்டு விட்டன எனறும இந்திய அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாத நிலையிலும் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி வழங்கப்படுகிறது.

இந்த இராணுவ ஒப்பந்தத்தை தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து வருகின்றது. தமிழ்நாட்டில் சட்ட பேரவைத் தேர்தல் முடியும்வரை இந்த இராணுவ ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது ஒத்தி வைக்கப்படும் எனத் தெரிகிறது.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடைபெறவேண்டியிருப்பினும் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே தேர்தலை நடத்த முதலமைச்சர் ஜெயலலிதா முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

இந்த நிலையில் வைகோவின் இராணுவ ஒப்பந்த எதிர்ப்புக் குறித்து கருத்து தெரிவித்த ஆளும் கூட்டணி அரசின் தலைமைக் கட்சியான காங்கிரஸின் பேச்சாளர் ஆனந்த சர்மா,

கூட்டணி அரசில் இடம்பெற்றுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தனது கருத்துக்களைக் கூட்டணிக் கட்சியின் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலேயே தெரிவிக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

(து-2)

# புதிய அமைச்சு ஸ்தாபிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் சமய கலாசாரம் தொடர்பான புதிய அமைச்சு ஒன்று ஜனாதிபதியினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 14ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி மூலம் புதிய அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டிருப்பது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஜனாதிபதியின் பொறுப்பில் உள்ள முஸ்லிம் மத மற்றும் கலாசார நடவடிக்கைகள் தொடர்பான திணைக்களம் புதிய அமைச்சிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

(ற-8)

# மிருக வெறிக்குப் பலியான இளம் பிஞ்சு

மிருக வெறிபிடித்த மனிதர்களின் எண் ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்வதற்கான அத்தாட்சிதான் இந்தக் குஞ்சுப்பாலன், பால் வடியும் முகம் மாறாத, நான்கு வயதுச் சிறுவன் ஜோய் சனின் குரூரக் கொலை. துண்டு துண்டாக வெட்டிப் புதைத்து மறைத்து வைக்கும் அள வுக்கு இந்த சவுல்ராஜனுக்கும் சின்னஞ்சிறு ஜோய்சனுக்கும் என்ன பங்காளிச் சண்டை? எதற்காக இந்தக் கொடூரக் கொலை?

## மாயமாய் மறைந்த மதலை

சென்னை புளியந்தோப்பு கன்னிகாபுரம் பகுதியிலுள்ள கஸ்தூரிபாய் காலனி எப பொழுதும் சிறுவர்கள் கூட்டம் கூட்டமாக விளையாடிக் கொண்டிருக்க, மார்ச் 9ஆம் திகதி வரை இருந்த நிலை 10ஆம் திகதி மாறிப் போனது. ஆம், அன்றுதான் மற்றச் சிறுவர்களுடன் ஓடியாடி விளையாடிக் கொண் டிருந்த சிறுவன் ஜோய்சன் மாயமாய் மறைந்து போனான்.

ஜோய்சனின் தநதை வில்சன் அந்தப் பகுதியிலுள்ள ஒரு நிறுவனத்தில் பாது காப்பு உத்தியோகத்தராகப் பணியாற்றிக் கொண்டு மனைவி ரூத்மேரி, 9 வயது மகள பிலோமியா, 4 வயது மகன் ஜோய்சன் என அழகான குடும்பத்தை அமைத்துக் கொண் டிருந்தான்.

வழக்கம் போல் மார்ச் 10ஆம் திகதி யன்று வில்சன் தன் பணியில் கண்ணும் கருத துமாக இருக்கு, அந்த நேரத்தில் தான் ஜோய்சன் காணாமல் போயிருக்கிறான்.

## தேடுதல் வேட்டை

தேடுதல் வேட்டை ஆரம்பமாகி இருக்கிறது. குடும்பசமேதமாக, ஆசையாய் வளர்த்த மகன் காணாமல் போனதில் ஆடிப்போன தம்பதியினர் தேடாத இடமில்லை. உற்றார் உறவினர்கள், நண்பர்கள், இனனும் ஜோய்சன் செல்வதற்கு எங்கெல்லாம் வாய்ப்பிருக் குமோ அங்கெல்லாம் சென று பார்த்து ஏமா ந்து போனார்கள். இவர்களுடன் ஜோய்ச னைத தேடும் பணியில் மும்முரமாய் ஈடு பட்டவன் சவுல்ராஜ். வில்சனின் நெருங்கிய உறவினன் இவன். தம்பி முறை. இப்போதோ இவனொரு குற்றவளரி. இந்த சவுல்ராஜ் செய்தது சாதாரண துரோகம் அல்ல. சொத் தைப் பறித்துக்கொண்டிருந்தாலும் ஜீரணித் துக் கொள்ளலாம். ஆனால் பறித்த இந்தப் பிஞ்சுப பாலகனின் உயிரை...

## பிஞ்சுக்கு எமனான பாதகன்

மிகவும் நெருக்கமானவன் என்பதால் காணாமல் போன அந்தநேரத்தில் இவன் தான குழந்தையைக் கடத்திச் சென்றிருக்கி றான என்பது எவருக்கும் தோன்றாமல் போயி ருக்கிறது. கோட்டை விட்டிருக்கிறார்கள் ஜோய்சனின குடும்பத்தவர்கள். அதன்பின் சாலையில், வீட்டில் எனப் பல இடங்களில் பார்த்திருக்கிறார்கள் சவுல்ராஜை.

ஜோய்சன் சவுல்ராஜுடன் நன்றாகப் பழகக் கூடியவனென்பதால் அவனிடம் யதார்த்தமாகவே விசாரித்திருக்கிறாள் ரூத் மேரி பொலிஸாருக்கு எந்தச் சந்தேகமும் வந்த விடாதபடி பார்த்துக்கொண்ட சவுல்ராஜ் அடிக்கடி பொலிஸுடன் இணைந்து ஜோய்ச னைத் தேடி வந்திருக்கிறான். ஜோய்சனை பற்றி எந்தத் தகவலும் கிடைக்காத நிலை யில் பொலிஸார் குழம்பிப போயிருக்கிறார் கள். நாட்கள் பலவாகியும் குழந்தை கிடைக் காமல்போக, குடும்பமே கண்ணீரில் மிதந் தது. சாப்பிடமனமின்றி ஜோய்சனின் கவ லையில் ஆழந்து போனார்கள் அனைவரும். எல்லோருமாகச் சேர்ந்து குழந்தையைத் தேடிக்கொண்டிருந்த அதே வேளையில் ஆந்திர மாநிலம் நோக்கிப் பயணமானார் ஒரு நபர். அவர்தான் இந்தச் சவுல்ராஜ். இந்த இடத்தில் தான் ஆரம்பமானது அனைததும்.

## சவுல்ராஜ் ஆடிய நாடகம்

சென்றவனால் சும்மா இருக்க முடிய வில்லை. ஜோய்சன் கிடைத்தால் போது மென்ற மனநிலையில் வில்சனும் ரூத்மேரி யும் இருக்க, அவர்களது நெருங்கிய உற வினனான கிருபாகரனுகககு சவுலராஜின் நடத் தை மேல் சந்தேகமேற்படத் தொடங்கியது. சவுல்ராஜின் பேச்சில், நடத்தையில் சந்தேக மேற்பட்டிருக்கிறது. ஆந்திரா சென்ற சவுல் ராஜ் சும்மா இருக்கவில்லை. ஆந்திராவில் மைபோட்டுப் பார்க்கும் பெரிய மந்திரவாதி யொருவன் இருப்பதாகவும் அவன் மைபோட் டுப் பர்த்தால் ஜோய்சன் எங்கே இருக்கி றான் என்பதைக் கண்டுபிடித்துவிடலாமென் றும், தான் அந்த மந்திரவாதியுடன் பேசிய தில் 8 ஆயிரம் ரூபா கொடுத்தால் மைபோட்டுப் பார்த்து ஒரு நொடியில் ஜோய்சனின் இருப்பிடததைக் கண்டுபிடித்து விடலாமெ னக் கூறியுள்ளதாகவும் வல்சனுக்கு டெலி போன் செய்திருக்கிறான சவுல்ராஜ். ஜோய் சனின் தாத்தா, மாமா கிருபாகரன் ஆகி யோர் மை போட்டுப் பார்க்கும் செலவுக் காக மந்திரவாதிக்குக் கொடுக்க ரூபா 8 ஆயி ரத்துடன் தயாராக இருக்கிறார்கள்.

ஆந்திராவுக்குப் புறப்பட ஆயத்தமாக இருந்தவர்களை மீண்டும் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருக்கிறான் சவுல்ராஜ். தானே மந்திரவாதியிடம் குறிகேட்டு வட் டதாகவும் பேசின் பிரிட்ஜ் அருகே ஜோய் சன் இருப்பதாகக் கூறப்படுவதாகவும் இவர் களிடம் சொல்லியிருக்கிறான் சவுல்ராஜ்.

அங்குபோய் தேட வில்சனும் கிருபா கரனும் ஒப்புக்கொள்ள சென்னை வந்து இறங்கினான் சவுல்ராஜ். வந்த இறங்கிய வன் குழந்தை ஜோய்சனைப் பற்றி ஒரு புதுக் கதையையும் சொல்லியிருக்கிறான்.

## தேடுதல் வேட்டையில் சிக்கிய பிணம்

ஜோய்சனைக் கண்டுபிடிக்கப்போகும ஆவலில், ஜோய்சனின் வீட்டில் உறவினர் கள் கூட்டமும் நண்பாகள் கூட்டமும் பெரு கியது. தேடுதல் வேட்டை தொடங்கியது. தேடுதலுக்காகச் சென்ற அதே பாதையில் தான் முன்பும் ஜோய்சனைத் தேடிச்சென்றி ருக்கிறார்கள். ஆனால் எல்லோராலும் இந்தப் பகுதியில் ஜோய்சனைத் தேடமுடியவில்லை. அங்கும் இங்கும் அலைந்ததுதான் மிச்சம். இவர்களுடன் சேர்ந்து தேடுதலில ஈடுபட்டி ருந்த சவுல்ராஜ் திடீரென இந்த இடத்தில் தோண்டிப்பாருங்கள் எனக் கூச்சலிட்டான்.

தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த அனைவருக்கும் ஒரே ஆச்சரியம். சவுல்ராஜ் இப்படிச் சொல்கிறானே எனறு, சவுல்ராஜ குறிப்பிட்ட இடத்தை நெருங்கிய கிருபா கரன் சற்றுத் தூரத்திலே கிடந்த நீலநிற தோல்பையொன்றைக் கண்டு திடுக் கிட் டான். ஜோய்சன் காணாமல்போன தினத் தனறு தங்களுடன் சேர்ந்து தேடுதலில் ஈடுபட்ட சவுல்ராஜின் தோளில் தொங்கிக் கொண்டிருந்த அதே பைதான் அது. முதல் நாள் சவுல்ராஜ் கொண்டுதிரிந்த அந்தப் பையை பிறகு எவரும் காணவில்லை.

இதைப் பெரிதுபடுத்தாது சவுல்ராஜ் குறிப்பிட்ட இடத்தைத் தோண்டிப் பார்த்த போது ரத்தக்கறைகளுடன் கட்டப்பட்ட நிலையில் ஓா் உரப்பை குபீர் என வசிய துர் நாற்றம... அநதப் பையை அவிழ்த்த போது துண்டு துண்டுகளாக வெட்டப்பட்ட நிலையில்...

அழுகிய தசைத் துண்டுகளின் துர் நாற்றம். ஆசையாகத் தூக்கி வளர்த்த குழந்தையின் துண்டு துண்டுகளாக வெட் டப்பட்ட உடல்.

## சவுல்ராஜ் சொன்ன கதை

கிருபாகரன் தன்னை மறந்தவனாக சவுல்ராஜின் கழுத்தை எட்டிப்பிடித்தான். அடுத்த நிமிடத்தில் அவன் மிருகமானான். அடியின் கோரம் தாங்காமல் சவுல்ராஜ் அலற ஆரம்பித்தான்.

ஜோய்சனை போல புத்திசாலியான ஒரு குழந்தையைப் பார்க்கமுடியாது. மாமா மாமா என்று என்மீது உயிரையே வைத்தி ருநதான். அவனைப் போல ஒரு குழந்தை எனக்கு இல்லையே என்ற வருத்தம். எனக்கு குழந்தைப் பாக்கியமே கிடையாது என டாக்டர்கள் கூறிவிட்டார்கள். என்னிடம் பணம இருந்தது. அந்தஸ்து இருந்தது. மாளிகை போல வீடு இருந்தது ஆனால் அந்த வீட் டிலே ஓடிவிளையாட ஒரு குழந்தை இல்லை.

பெருமூச்சுடன் நிறுத்தினான் சவுல்ராஜ். காயத்திலிருந்து பெருகிய ரத்தத்தைத் துடைத்துக்கொண்டான்.

ஜோய்சனை தத்துத் தரும்படி வில்ச னிடம் பலமுறை கேட்டேன். ராஜா மாதிரி வளர்ப்பேன். எனது சொத்துக்களையெல் லாம் இப்பொழுதே அவன் பெயருக்கு எழுதி வைத்துவிடுகிறேன் என்று ரூத்மேரியிட மும் சொன்னேன். அவர்கள் இருவரும் நிர்த் தாட்சனியமாக மறுத்துவிட்டார்கள். அந்த எண்ணமிருந்தால் வீட்டுப் பக்கமே வராதே என்று ஏசினார்கள்.

ஜோய்சன் மேல் நான் வைத்திருந்த பாசம் - அவன் பெற்றோரது கண்டிப்பு - என்னை மெல்ல மெல்ல மிருகமாக்கி கொண்டே வந்தது. ஜோய்சன் இருப்பதால தானே இவர்கள் இப்படி எல்லாம் பேசுகி றார்கள் அவனையே முடித்துவிட்டால்...

## மனதிலே புகுந்த புலி

இரத்த தாகம் கொண்ட புலி என் மனதிலே புகுந்தது... சம்பவம் நடந்த தினத் தன்று வழக்கம்போல என்னைக் கண் டதும் ஜோய்சன் மாமா என அழைத்தபடி ஓடோடி வந்தான்... எனககு உதவாத ஜோயசன் வில்சன் குடும்பத்துக்கும் உதவக்கூடாது என்ற துர்எண்ணம் மனதில் உதித்து மரமாக வளர்ந்தது. ஐஸ்கிறீம் வாங்கித் தருவதாக அவனைத் தூக்கிச்சென்று ஒரு மறைவிடத் தில் அவனது கழுத்தை நெரித்துக் கொலை செய்தேன். அவனது உடலை மறைப்பதற் குள் அவன் காணாமல் போன செய்தி வெளி வந்து தேடுதல் வேட்டை ஆரம்பமாகிவிட்டது. அவனது உடலை நீல நிறப்பை ஒன்றில் திணித்து எனது தோளில் மாட்டிக் கொண்டு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டவர்களில் ஒருவனாக நானும் கலந்து கொண்டேன்.

## நீல நிறப்பையின் மர்மம்

ஜோய்சனைத் தேடும்போது சவுல்ராஜ் நல நிறப்பை ஒன்றுடன் தேடுதல் வேட்டை யில் ஈடுபட்டிருந்தது அனைவரது ஞாபகத் துககும் வந்தது. அந்தநேரத்தில் அந்தப் பையைப் பரிசோதித்திருந்தால்... என்ற எண்ணமும் ஏற்பட்டது.

சவுல்ராஜ் தனது கதையைத் தொடர்ந் தான. அன்றிரவு பையைத் திறந்து ஜோய் சனின் சடலத்தைப் பார்த்தபொழுது உறங் கிக்கிடந்த மிருகம் மீண்டும் விழித்துக்கொண் டது. அவனது முகத்தை எவருமே பர்க்கக் கூடாது என்ற வெறி ஏற்பட இறைச்சி வெட் டும் கத்தியினால் அவனுடலைக் கண்ட துண்டமாக வெட்டி, பேசின் பிரிட்ஜ் ரயில் நிலைத்துககுப் பக்கமாக இருந்த புதர்க் காட்டில் புதைத்தேன். அத்துடன் நிறுத்தி யிருந்தால் நான் அகப்பட வேண்டிவந்தி ராது. ஜோய்சனின சிதைந்த உடலை பெற் றோர் பார்க்க வேண்டும். வேதனைபபட்டுத் துடிக்கவேண்டும். எண்ணி எண்ணி என்றென றும் கதறவேண்டும் என்ற வெறி ஏற்பட ஆந்திரா மந்திரவாதியைக் கொண்டு மாந் திரீக மை மூலம் ஜோய்சனின் இருப்பிடத் தைக் கண்டுபிடித்துவிட்டதாக நாடகமாடி னேன். ஆனால்... கடைசியில்... வினை விணைத்தவன் வினை அறுப்பான் என்ற கதை யாகிவிட்டது. நீண்ட பெருமூச்சுடன் சவுல் ராஜ் தனது ஒப்புதல வாக்குமூலத்தை அளித்தான்.

இப்பொழுது சிறைச்சாலையில் விசா ரணை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும சவுல்ராஜைப் பார்ப்பவர் எவரும் இல்லை. அவனது மனைவி குடும்பம் உட்பட முழுக் கிராமமுமே அவனைப் புறக்கணித்துவிட்டது.

ஆசையே துன்பங்கள் எல்லாவற்றுக் கும் காரணம் என்றார் புத்தர். 'ஆசை அறு மின் ஈசனோடாயினும் ஆசை அறுமின்' என்றார் திருமூலர். ஜோய்சன் மீது கொண்ட ஆசைதான் இன்று சவுல்ராஜை இந்த நிலைக்குக் கொண்டுபோய் விட்டிருக்கிறது. □


# துண்டு துண்டாக வெட்டப்பட்ட கோரம்

**பொ. இராசதுரை**

# பொதுக்கட்டமைப்பை வலியுறுத்தி வடமராட்சியில் சுமார் 5 ஆயிரம் பேர் பங்கேற்ற மாபெரும் பேரணி

(துன்னாலை)

பொதுக்கட்டமைப்பை வழங்கக்கோரி யும் அதறகு எதிர்ப்புத் தெரிவிக்கும் பேரின வாதிகளைக கண்டித்தும் வடமராட்சியல மாபெரும் பேரணி ஒன்று நேற்றுமுன்தினம் காலை நடாத்தப்பட்டது.




சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்ட இப்பேரணி பொலிகண்டியிலிருந்து ஆரம்பமாகி சுப்பர் மடத்தைச் சென்றடைந்தது.

இப்பேரணியில்,



'ஆசையை வெறுத்த புத்த துறவிகள்... ஆட்சியில் நுழைந்து அராஜகம் செய்வ தேன்?', 'எமது கடலும் எமது நிலமும் அடை யும் வரைக்கும் ஓயமாட்டோம்!', 'காவி போர் த்திய புத்தர் பரம்பரை பாவித் தமிழரை வதைத்திடலாமோ?', 'நாடகம் ஆடும் நாட் டின் தலைவி நடித்தது போதும் நடப்பதைத தெரிவி!', 'புரிந்துணர்வு ஒப்பந்தம் என்னாச்சு?, பிரிந்து நாம் போவதும் நிசமாச்சு!', 'தலைவா! ஆணை தந்துவிடு தகாப்போம் எதிரி கோட்டைகளை', 'சிங்கள தேசம் வாழ்வது போலே எங்களை இங்கே வாழவிடு', 'புத்தன் தந்தது பஞ்சசீலம் அரசு தந்தது பயங்கரவாதம்', 'இணங்கி வாழ இறங்கி வந்தோம் உணரா அரசைப் பிரிந்து செல்வோம்', 'பேரினவாதப பௌத்த அரசே! போரி னைத் தொடங்கினால பொசுங்கிப் போவாய்!' மற்றும் 'படையினர் காவல் யாருக்கு முடிவெடு படை கள் முடிவதற்குள? ஆகிய உணச்சிக் கோஷங்கள் முழங்கின. இதன்போது வீதியில் காணப்பட்ட காவலரண்களில் உள்ள இராணுவத்திற்கு சிங்களத்தில் எழுதப்பட்ட மகஜர்களும், அவர்களின் உட மைகளை வீடுகளுக்குப் போகும் போது கொண்டு செல்ல உதவும் வகையில் வெற்றுச் சாக்குகளும் வழங்கப்பட்டன.

பேரணியின் இறுதியில் சுப்பர் மடத்துச சந்தியில் கண்டனக் கூட்டம் இடம்பெற் றது. கடற்றொழிலாளர் சமாசச் செயலா ளர் சூரியகுமார் தலைமையில இடம்பெற்ற இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்



பினர்களான கி.சிவநேசன, சிவாஜிலிங்கம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் பேரின வாத அரசைக் கண்டித்து உரை நிகழ்த் தினர்.

இறுதியில் கடற்றொழிலாளர் சமாசத் தமிழீழ பொறுப்பாளர் வ.மோகனிடம் தமி ழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகர னுக்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

அத்துடன், ஐ.நா.செயலாளர் கொபி அனானுக்கும், ஐரோப்பிய ஒன்றியச் செய லருக்கும் தேசிய எழுச்சிப் பேரவையூடாக மகஜர்கள் வழங்கப்பட்டன.

(ற-101)

# கருக்கலைப்புக்கு அனுமதி அளிப்பதா? ஐரோ.நாடுகளுக்கு போப் கடும் கண்டனம்



(ரோம்)

புதிய போப் ஆண்டவர் ஜோசப் பெனடிக்ட ஒரு புத்தகம் எழுதி உள்ளார்.

'பெனடிக்டின் ஐரோப்பா' என்ற இந்தப் புத்தகத்தின் வெளியீட்டு விழா நேற்று நடந்தது. போப் ஆண்டவராகப் பதவி ஏற்ற பிறகு இந்த 152 பக்க புத்தகத்தை பெனடிக்ட் எழுதி இருக்கிறார்.

இந்தப் புத்தகத்தில் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு பொதுவான அரசியல் சட்டம், பொதுவான பொருளாதார கொள்கை ஆகியவற்றை உருவாக்குவதில் அக்கறை காட்டும் ஐரோப்பிய நாடுகள ஆக்கத்திலும், ஒழுக்கத்திலும் அதிக அக்கறை காட்டுவதில்லை. மத கோட்பாடுகளைப் பினபற்றுவதிலும் கவனம் செலுத்துவதில்லை என்று அந்தப் புத்தகத்தில் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கருக்கலைப்பையும் அவர் கடுமையாக எதிர்த்துள்ளார். கருக்கலைப்புக்குத் தாராளமாக அனுமதிக்கும் வகையில் ஐரோப்பிய நாடுகள் சட்டங்களைக் கொண்டுவருவதை அவர் கடுமையான விமர்சித்துள்ளார்.

குழந்தைகள் கொலை செய்யப்படுவதை வன்மையாக எதிர்க்கும் விஞ்ஞானிகள், கருநிலையில் இருக்கும் குழந் தைகள் அழிக்கப்படுவதை எதிர்க்காதது ஏன்? என்றும் அதில கேளவி எழுப்பி உள்ளார்.

கருக்கலைப்பு மனித சமுதாயத்தின் சீரழிவுக்கு வழி வகுத்துவிடும் என்றும் அவர் எச்சரித்து இருக்கிறார். (ந)



துருக்கி நாட்டு அரசை கவிழ்க்க சதி செய்த தாக அந்த நாட்டு மதத்தலைவர் மெதினன் கப்லான் என்பவருக்கு ஆயுள் தண்டனை விதித்து இஸ்தாண்புல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நீதிமன்றத்தில் இருந்து அவரை பொலிஸார் சிறைக்குக் கொண்டுசெல்லும் காட்சி. இந்தத் தீர்ப்பை தொடர்ந்து துருக்கி முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# ஜப்பானில் தொடர் நிலநடுக்கம்; பீதியில் மக்கள் சிதறியோட்டம்

(டோக்கியோ)

ஜப்பானின் மத்திய வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் 5 முறை பலத்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் கட்டடங்கள் அதிர்ந்தன. பீதியில் உறைந்த மக்கள் வீட்டில் இருந்து வெளியேறி சாலைகளில் சிதறி ஓடினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு மற்றும திங்கட்கிழமை அதிகாலையில் நேரிட்ட இந்த நிலநடுக்கத்தால் உயிர் மற்றும் உடைமைகளுக்குச் சேதம் எதுவும் இல்லை.

முதல் இரண்டு நிலநடுக்கங்கள் 5.6 மற்றும் 4.1 என்ற அளவில் ரிக்டரில் பதிவானது. அடுத்த இரண்டு நிலநடுக்கங்கள் 5.0 மற்றும் 4.1 என்ற அளவில் ஏற்பட்டன. ஐந்தாவது நிலநடுக்கம் 4.5 என்ற அளவில் பதிவாகியது.

இந்த 5 நிலநடுக்கங்களாலும் சுனாமி தாககுதல் அபாயம் இருக்காது என்று ஜப்பான் நாட்டு வானிலைத்துறைஅறிவித்துள்ளது. (ந)

## சீனா புதிய முயற்சி

# கடலில் நிலக்கரி சுரங்கம்!

(பிஜீங்)

கடற்கரைக்கு மிக அருகே முதன்முதலாக நிலக்கரிச் சுரங்கத்தைத் தோண்டும் பணியை சீனா தொடங்கியுள்ளது.

சீனாவின் கிழக்கு மாகாணமான ஷாங்டோங்கில் லோங்கூ நகரின் கடற்கரையில் இருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் இந்தச் சுரங்கம் அமைந்துள்ளது.

கடல் மட்டத்தில் இருந்து 350 மீற்றர் ஆழத்தில் 150 மீற்றர் நீளத்துக்கு முதல் கட்ட சுரங்கப் பணிகள் நடக்கும்.

இங்கு 89,200 தொன் நிலக்கரி கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சுரங்கப் பணியின்போது கடல்நீர் உள்ளே புகாமல் தடுக்க அதிநவீன இயந்திரங்களின் உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ந)

# சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்தது ரஷ்ய விண்கலம்

(மொஸ்கோ)

சர்வதேச விண்வெளி நிலையத்துடன் வெற்றிகரமாக இணைந்தது ரஷ்ய விண்வெளி சரக்கு கலம்.

கஜகஸ்தானில் உள்ள பைகானூர் விண்வெளி ஆய்வு நிலையத்தில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலையில் இந்த விண்வெளி சரக்கு கலம் புறப்பட்டது.

விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைய வேண்டிய தருணத்தில் தானியங்கி இயந்திரம் சரிவரச் செயல்படவில்லை.

இதனால் விண்வெளி நிலையத்தில் உள் ரஷ்ய அமெரிக்க விண்வெளி வீரர்கள் ரஷ்ய விண்வெளி கலத்தை விண்வெளி நிலையத்துடன் இணைத்தனர்.

அதன் பின் அதில் இருந்த உணவு, நீர், எரிபொருள், அறிவியல் உபகரணங்கள், விண்வெளி நிலையத்தில் உள்ள பிரதான பிராணவாயு கருவிக்கான உதிரிப்பாகங்கள் விண்வெளி நிலையத்தில் இறக்கப்பட்டன. (ந)

# தேர்தல் பிரசார சுவரொட்டி



லெபனானில் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதற்கான பிரசாரத்தில் அங்குள்ள அரசியல் கட்சிகள் மும்முரமாக இறங்கி உள்ளன.

லெபனானில் உள்ள திரிபுலி என்ற கடற்கரை கிராமத்தில் மலைப்பகுதிகள் அதிகமாக உள்ளன.

இங்கு மக்கள் மத்தியில் தேர்தல் பிரசாரம் செய்வதில் அரசியல் கட்சிகள் போட்டா போட்டி போடுகின்றன.

அந்தப் பகுதி முழுவதும் உள்ள மலை இடுக்குகளில் அரசியல் கட்சித் தலைவர்கள் படத்தை ஒவ்வொன்றாக வைத்து கட்சித் தொண்டர்கள் பிரசாரம் செய்து வருகின்றார்கள்.

அங்குள்ள நகரமொன்றை அலங்கரித்துள்ள தேர்தல் பிரசார சுவரொட்டிகளை படத்தில் காணலாம். (ந)

## ஜெயேந்திரர் கைது விவகாரம்;

# நீதிமன்றில் ஆஜராகுமாறு கருணாநிதிக்கு சம்மன்



(சென்னை)

ஜெயேந்திரர் கைது விவகாரத்தில் தமிழக அரசு தாக்கல் செய்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு திமுக தலைவர் மு.கருணாநிதிக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் 19ஆம் திகதி அவர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று சென்னை 4ஆவது கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் கொலை தொடர்பாக காஞ்சி ஜெயேந்திரர் கடந்த ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

அவரது கைது குறித்து கருத்துத் தெரிவித்த கருணாநிதி, தமிழக அரசின் நடவடிக்கையை விமர்சித்தார்.

அவரது விமர்சனம் அரசுக்குக் களங்கம் ஏற்படுத்துவதாகவும் அவதூறாகவும் உள்ளது. எனவே, அவர் மீது அவதூறு சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேணடும் என்று தமிழக அரசு சார்பாக செஷனஸ் நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இப்புகாரை விசாரணைக்கு ஏற்ற 4வது கூடுதல் செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி ஜெயபால், ஆகஸ்ட் 19ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கருணாநிதிக்கு சம்மன் அனுப்ப உத்தரவிட்டார். (ந)

# வெற்றிகர ஏவுகணைச் சோதனை

(பாலாசூர்)

ஆகாஷ் ஏவுகணையை ஏவி நடத்தப்பட்ட சோதனை வெற்றிகரமாக நடந்ததாக இராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்திய இராணுவ அதிகாரிகள் ஒரிசா மாநிலம் சண்டிலிப்பூர் பகுதியில் நேற்று முன்தினம் ஆகாஷ் ஏவுகணையை ஏவி சோதனை நடத்தினார்கள்.

சோதனை வெற்றிகரமாக நடந்ததாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

ஆகாஷ் ஏவுகணை தரையில் இருந்து கிளம்பி வான் இலக்குகளைத் தாக்கக்கூடிய ஆயுதமாகும்.

5.6 மீற்றர் நீளமும் 700 கிலோ எடையும் கொண்ட ஆகாஷ் ஏவுகணையை இராணுவ டாங்கியில் இருந்து ஏவி எதிரிகளை வீழ்த்தலாம்.

இந்த ஏவுகணை தரைப்படை மற்றும் விமானப்படையினருக்கு பயன்படக்கூடியது. (ந)



ஜெர்மனியில் நடந்துவரும் கான் படரேஷன்ஸ் கோப்பை கால் பந்து போட்டியில் மெக்சிகோவும் பிரேசிலும் மோதின. போட்டியைக் காண மெக்சிகோ ரசிகர்கள் வந்திருந்தனர்.

ரசிகர் ஒருவர் தனது செல்லக் குட்டியை தலையில் தூக்கி வந்தார்.

அந்தக் குட்டி ரகிகர் எப்படி ரசிக்கிறார் பாருங்கள்!

# பிரதமருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

வியட்நாம் பிரதமர் பகான் வென்காயை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

வியட்நாம் பிரதமர் பகான் வென்காய் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கு பிறகு வியட்நாமைச் சேர்ந்த ஒரு மிகப்பெரிய தலைவர் அமெரிக்கா செல்வது இதுவே முதல் முறையாகும்.

வியட்நாமில் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கூறி பிரதமர் தங்கி இருந்த ஓட்டல் முதன் இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது. (ந)

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார் - குறள்

வலம்புரி

# முஸ்லிம் தலைவர்கள் ஒத்துழைக்கவேண்டும்

சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசும் - விடுதலைப் புலிகளும் இணைந்து கைச்சாத்திடவுள்ள பொதுக் கட்டமைப்பில் முஸ்லிம் தரப்புக்கு இடமில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பொதுக் கட்டமைப்புத் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வதற்காக கொழும்புக்கு வந்துள்ள அமைச்சர் விடார் ஹெல்கீசனை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சந்தித்திருந்தார்.

இச்சந்திப்பின்போதே மேற்கூறப்பட்ட செய்தியை ஹக்கீமிடம் அவர் தெரிவித்திருந்தார்.

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் முஸ்லிம் தரப்பில் எவரும் கைச்சாத்திடமுடியாதென்ற ஹெல்கீசனின் அறிவிப்பு முஸ்லிம்களை ஓரங்கட்டுவதாக அமையமாட்டாது.

பொதுக்கட்மைப்பு என்பது அரசினதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் அரசியல் எல்லைக்குள் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான ஓர் இணக்கப்பாடாகும். சுனாமிப் பேரலையால் இலங்கையில் இருக்கக்கூடிய பல்லின மக்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

சுருங்கக்கூறின், இன - மத - மொழி வேறுபாடுகளைப் பார்க்காது, பெரும்பான்மை - சிறுபான்மை என நோக்காது இந்த நாட்டில் நடந்த நிகழ்வு சுனாமி ஒன்றுதான். எனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித வேற்றுமைகளுமின்றி நிவாரண உதவிகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

வடக்குக் கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணியென்பது முஸ்லிம் மக்களை உள்ளடக்கியதாகவே அமையும்.

வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் என்ற வகுதியானது முஸ்லிம்களையும் உள்ளடக்கியதென்ற உண்மையை முஸ்லிம் தலைவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

புறநடையான சம்பவங்களை மட்டும் அடிப்படையாகக்கொண்டு அரசியல் ஊகங்களை எடுத்துக்கொள்வது நாட்டில் நிலையான அமைதிக்கு குந்தகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

எனவே பொதுக் கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம் தலைவர்கள் குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிதானமாகவும், தீர்க்கதரிசனத்துடனும் நடந்துகொள்ளவேண்டும்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலசபையில் தமக்கும் தனியிடம் தேவை என்ற கோரிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்ததன் ஊடாக சமாதானத்தின் தடைக்கு அவர்களும் காரணமென்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொதுக் கட்டமைப்பின் உருவாக்கத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் மூக்கை நுழைத்துக்கொண்டு எல்லாவற்றையும் கெடுத்த பெயரைப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதை உறுதிசெய்வது காலத்தின் தேவை.

இது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமன்றி, இந்த நாட்டிற்குமே பேருதவியாக அமையும்.

## சேது சமுத்திரத் திட்டப்பணிகளின் போது
# சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கு இந்திய அரசு ரூ.24கோடி ஒதுக்கீடு

(சென்னை)

சேது சமுத்திர கால்வாய்த் திட்டப் பணிகளின் போது சுற்றுச்சூழலுக்கு எவ்விதமாகும் நேரிடாதவாறு கணகாணிக்க 24 கோடி ரூபா செலவில் சுற்றுச்சூழல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்ட இந்திய அரசு சேது சமுத்திரத் திட்டத்திற்கான இறுதிநிலை விரிவான திட்ட அறிக்கையின படி 3 நிலைகளில் இக்கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இது குறித்து இந்திய அரசின் பத்திரிகைத் தகவல் அலுவலகம வெளியிட்டுள்ள குறிப்பில்,

கால்வாய் அகழ்வுப்பணிகளின் போது கடல் சார்ந்த சுற்றுச் சூழல் மாசுபடாதவாறு தொடர்ந்து கண்காணிக்கும் பணிகள் முதல் நிலையில் மேற்கொள்ளப்படும் 4மணி நேரத்திற்கு ஒரு முறை கடல் நீரின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

பாக்,விரிகுடா மற்றும் ஆதம் பாலம் பகுதிகளில் கடல் அகழ்வுப்பணி மேற்கொள்ளப்படும்.இடங்களிலும் அகழ்வு செய்யப்பட்ட மணல் போன்ற பொருட்கள் கடலுக்குள் கொட்டப்படும பகுதிகளிலும் இந்தத் தொடராய்வு மேற்கொள்ளப்படும.

கடல் அகழ்வுப்பணி மேற்கொள்ளப்படும் காலகட்டத்தில் மன்னார் வளைகுடா உயிரின மண்டலப்பகுதியில் சுற்றுச் சூழல்குறித்த ஆய்வுகள் இரண்டாம் நிலையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

இப்பகுதியில் கடல் நீரஉள்ளீட்ட மாதிரிகள் 8மணி நேரத்திறகு ஒரு முறை சேகரிக்கப்பட்டு விரிவான ஆய்வுகளுக்குட்படுத்தப்படும்.

3ஆம் நிலையில் ஆதம்பாலம் அருகே மன்னார் வளைகுடாவல் கால்வாய்த்திட்டப்பகுதிக்கு மிக அருகில் உள்ள தீவில சுற்றுச்சூழல் ஆய்வுகள் ஆகழ்வுப்பணியின் போது தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இங்கு நாள்தோறும் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

கடல் நீர், படிமன் நிலை,கடல் சார் சுற்றுச்சூழல் ஆகியவை குறித்து சேதுசமுத்திரத்திட்டப் பணிகளின் போது விரிவான ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. காற்றின் தூய்மைநிலை,திட்டப்பணிகளால் எழும் ஒலி அளவு ஆகியவை தொடர்ந்து கண்காணிக்கப்படுவதோடு திட்டம் சார்ந்த கடற்கரைப்பகுதிகளில் சுற்றுச்சூழல் ஏற்படும் தாக்கம் குறித்து விரிவாக ஆராயப்படும்.

சேது சமுத்திரத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத்திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பை சேது சமுத்திர நிறுவனம் ஏற்கும். இதற்காக அமைக்கப்படும் சுற்றுச் சூழல் மேலாண்மைப்பிரிவு சேது சமுத்திரத் திட்டப் பணிகளை மேற்கொள்ளும் பல்வேறு ஒப்பந்தக்காரர்களின் சுற்றுச் சுழல் சார்ந்த பொறுப்புகளைக் கண்காணிக்கும்.

சுற்றுச்சூழல் பொறியாளர்கள்,சுற்றுச்சூழல் இயல் வல்லுநர்கள், வேதியியல் ஆய்வாளர்கள், கடல் உயிரியல் வல்லுநர்கள் உள்ளிட்ட குழு இப்பணிகளை மேற்கொள்ளும். சுற்றுச் சூழல் சம்பந்தமான விளைவுகள், மாசு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவை குறித்த விரிவான அறிக்கையை இந்தச் சுற்றுச்சூழல் மேலாண்மைப்பிரிவு சேது சமுத்திர நிறுவனத்திடம் மாதந்தோறும் சமர்ப்பிக்கும்.

காலவாய் அகழ்வுப்பணிகளின் போது தோண்டி எடுக்கப்படும் களி மண்,மணல் போன்ற பொருட்கள் இதற்கென கரையில் இருந்து வெகு தொலைவில் கடலுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே கொட்ட அனுமதிக்கப்படும. இப்பொருட்களை கரைப்பகுதிகளில் கொட்ட எந்த சூழ்நிலையிலும் அனுமதிக்கப்படமாட்டாது.

சேது சமுத்திரத்திட்டப்பணிகளின் போது சுற்றுச்சூழல் சம்பந்தமான அம்சங்களை தொடர்ந்து கண்காணிக்க கீழ் கண்ட புகழ் பெற்ற அறிவியல் ஆய்வு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கால்வாய் அகழ்வுப் பணிகளில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் உள்ளிட்ட சாதனங்கள் கடல் நீரையோ, காற்றையோ மாசுபடுத்தாதவாறு தொடர்ந்து கண்காணிக்கப்படும். கடல் நீரில் சேற்றுத்தன்மை அகழ்வுப்பணிகளின் போது அதி நவீன அகழ்வுக்கப்பல்கள் பணியல் ஈடுபடுத்தப்படும். சுற்றுச் சூழலுககு இசைவான அகழ்வுத் தொழில் நுட்பங்கள். சேது சமுத்திரக் கால்வாய்ப் பணியில் பயன்படுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# சுனாமி நிவாரணப் பொருட்கள் விற்பனை பௌத்த பிக்கு உட்பட மூவருக்கு சிறை!

(கொழும்பு)

சுனாமி நிவாரணப்பொருட்களை விற்பனை செய்த வழக்கில் பௌத்த பிக்கு ஒருவர் உட்பட மூவருக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த அம்பாறை மக்களுகக்கு விநியோகிப்பதற்காக குருநாகலையில் சேகரிக்கப்பட்ட நிவாரணப்பொருட்களை பதியதலாவ சேரங்கட பிரதேசத்தில் விற்பனை செய்த சம்பவம் தொடர்பாக வழக்குத்தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கின் தீர்ப்பினை வழங்கிய அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யு.ரி.எம்.வறாவேவ மூன்று சந்தேக நபர்களுக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

வழக்தின் பிரதான சந்தேக நபரான பொல்பித்திகம பிரதேச பிக்குவான சிறிரதனஜோத் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 5வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத சிறைத்தண்டனையும் நிதியத்திற்கு 30ஆயிரம் ரூபா வழங்குவதற்கும் உத்தரவிடப்பட்டது.

இரண்டாம் சந்தேக நபரான லொறிச் சாரதி எல்.எம்.பியசேன என்பவருக்கு இரண்டு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறைத்தண்டனையும் 2500ரூபா அபராதமும் 3ஆம் சந்தேக நபரான பதியதலாவ சேரங்கட பிரதேச வர்த்தகரான எரிக்வாகிஸ்ட்ட என்பவருக்கு 5 வருடததிற்கு ஒத்தி வைக்கப்பட்ட இருவருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. (ற)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் "கலைமலர்" சஞ்சிகை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையினால் வருடாந்தம் வெளியீடு செய்யப்படுகின்ற "கலைமலர்" சஞ்சிகையின் வெளியீட்டு விழா நாளை மு.ப 9.30மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலஷ்மி மண்டப்த்தில் கலைமலர் ஆசி ரியர் ம.பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இநநிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரனும சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை திருமதி ஆ. பொன்னம்பலம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வெளியீட்டு விழாவின் ஆசியுரையினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும், வாழ்த்துரையினை சிரேஷ்ட விரிவுரையாளரும் மன்றக்காப்பாளருமான கலாநிதி செ. திருநாவுக்கரசும் வழங்குவார். இந்நூல் வெளியீட்டிற்கான தலைமையுரையினை ம. பிரபாகரன் நிகழ்த்துவார்.இந்நூலிற்கான அறிமுக உரையினை ஆசிரிய மாணவன் சு. பிரேமன் வழங்குவார்

வெளியீட்டு உரையினை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி ஆர். சத்தியேந்திரம் பிள்ளையும் ஆய்வுரையினை திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோன்சன ராஜ்குமாரும் நிகழ்த்துவர். பதிலுரையினைதுணை இதழ் ஆசிரியர் செல்வி சி.யசோதா நிகழ்த்துவர். இதனைத் தொடர்ந்து ஆசிரிய மாணவாகளின கலை நிகழ்வுகள் நடைபெறும். (ம)

# விண்ணிலே நிகழ்ந்த அபூர்வக் காட்சி

வான்வெளி மண்டலத்தில் அவ்வப்போது சில முக்கிய நிகழ்வுகள் நிகழும் சில அபூர்வ நிகழ்வுகள் பூமியில் இருந்து பார்ப்பதற்கு கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும். அந்த வகையில் நேற்று முன்தினம் வானில் ஒரு அற்புத நிகழ்ச்சி நடந்தது.

நட்சத்திர மண்டலங்களில் மிக அழகான விருச்சிக ராசி நட்சத்திரக் கூட்டங்களில் ஒன்றான பிரகாசமான ஆன்ராஸ் நட்சத்திரத்தினை நில்வு மறைக்கும் அற்புதக் காட்சி நேற்றுு முன்தினம் இரவு நிகழ்ந்தது.

இநத நட்சத்திரத்திற்கும் பூமிக்குமிடையே நிலவு நேற்று முன்தினம் பயணம் செய்தது. இதன் மூலம் ஆன்ராஸ் நட்சத்திரம் பூமியில் இருந்து காணமுடியாதபடி சிறிது நேரம மறைந்திருந்து பிறகு மீண்டும் தோன்றும் காட்சி பார்ப்பதற்கு கண்ணைக்கவர்ந்தது என்றும் தெற்கு மற்றும் தென் கிழக்கு வானில் இக்காட்சி தென்பட்டதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ற)

# யுத்தம் காரணமாக பனை தென்னை அழிந்ததால் 62% மான சீவல் தொழிலாளர் தொழில் விலகல்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சீவல் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற சீவல் தொழிலாளர்களில் சுமார்62 சதவீதமானோர் அத்தொழிலில் தொடர்ந்தும் ஈடுபடுவதில் இருந்து விலகியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

கடந்த இரு தசாப்தங்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது பல ஆயிரக்காணககான பனை,தென்னை மரங்கள் வெட்டப்பட்டும், அழிக்கப்பட்டும் இருந்துள்ளமையினால் சீவல் தொழிலில் ஈடுபடுவதற்கு போதிய மரங்கள் இல்லாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சீவல் தொழிலை தமது பாரம்பரியத்தொழிலாகக் கொண்டிருநதவர்களில பெரும்பாலான்வர்கள் அத்தொழிலுக்கு முழுமையாக முழுக்குப் போட்டுவிட்டு வேறு வகையிலான தொழில்களில் இப்போது ஈடுபட்டுவருவதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வருகின்ற பனை,தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து வந்த அங்கத்தவர்களில் பெருந்தொகையானோர் அச்சங்கங்களுக்கு கள்ளை வழங்குவதில்லை எனவும் தெரியவருகிறது.

இதன் காரணமாக கள் உற்பத்தியையும் விற்பனையையும் மூலாதாரமாகக்கொண்டிருக்கும் இக்கூட்டுறவுச்சங்கங்களின் எதிர்கால நடவடிக்கையும் கேள்விக்குறியாகவுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (அ-16)

# தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

**நம்மை தமது பணியாளர்களாகக் கடவுள் படைக்கவில்லை நாமும் கடவுளுக்கு சமமானவர்கள். நண்பர்கள் என்று தெரிந்து கொள்ளும் போது சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் நாம் அடைகிறோம். நித்தியமான பரம்பொருளிடமிருந்து இம்மியளவு நாம் விலகி இருக்கும் வரை அச்சம் நம்மை விட்டு அகலாது. மனிதர்கள் காட்டும் அன்பில் பிரதிபலனை எதிர்பார்ப்பது இருக்கும். பக்தியில் அதற்கு இடமில்லை.**

சுவாமி விவேகானந்தர்

# அரசாங்கத்தின் திட்டங்களுக்கு ஜே.வி.பி. முட்டுக்கட்டை – அனுரா

அரசாங்கத்தின் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி முட்டுக்கட்டையாக இருந்தது என்று சுற்றுலா முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

தற்போது அவர்கள் அரசாங்கத்தில் இல்லாததால் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளை தங்குதடையின்றி மேற்கொள்ளமுடியும். அரசாங்கம் கடந்த ஒருவருட காலமாக அறிமுகப்படுத்திய சகல பொருளாதார மாற்றங்களுக்கும் முன்னாள் சகோதர்களான மக்கள் விடுதலை முன்னணியில் இருந்த அமைச்சர்களே தடையாக இருந்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இத்தகைய தடைகள் எதிர்காலத்தில் ஏற்படாது என்றும், அவர்கள் மீண்டும் அரசாங்கத்தில் சேரவேண்டிய தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார். (சு)

## புலிகளின் நிலைப்பாடு அறிந்த....

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவதற்கு தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தன்னை சந்தித்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனிடம் அவர் இவற்றைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொதுக் கட்டமைப்பின் இறுதி வடிவத்தினை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்காக விடார் ஹெல்கீசனிடம் ஜனாதிபதி கையளித்துள்ளார். இது குறித்து விடுதலைப் புலிகள் நிலைப்பாட்டைத் தெரிந்த பின்னர்தான் அடுத்தகட்ட நகர்வுகளைத்தான் மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பொதுக் கட்டமைப்பு முயற்சியும் மற்றும் ஒவ்வோர் நகர்வுக்கும் நோர்வேயின் ஆதரவு இருக்குமென விடார் ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது முஸ்லிம் கட்சிகளின் கரிசனைகள் குறித்தும், இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடுவதில் அவர்களுக்குண்டான ஆதரவு குறித்தும் ஜனாதிபதி நோர்வே யின் பிரதி வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்தபோது ஹெல்கீசன், இந்தக் கரிசனைகளை இன்று புலிகளுடனான சந்திப்பின்போது எடுத்துக் கூற விரும்புவதாகத் தெரிவித்தாரென ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நடைமுறையில் இருக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் அமுலில் வைத்திருப்பது, அதனை மறுசீரமைப்பது, அதன் அவசியம் என்பன குறித்தும் இச்சந்திப்பின்போது ஹெல்கீசன் ஜனாதிபதிக்கு விளக்கியுள்ளார்.

அத்துடன் நாட்டில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் படுகொலைகள் குறித்து ஜனாதிபதி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை இன்று வன்னிக்குச் செல்லும் விடார் ஹெல்கீசன், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து ஜனாதிபதியின் நிலைப்பாடு குறித்தும், பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திடுவதற்கான புலிகளின் முடிவு குறித்தும் கேட்டு அறியவுள்ளார்.

இச்சந்திப்பு விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இன்று காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-4)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி தலைமையில் ஆளுங்கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் விசேட சந்திப்பு இடம்பெறவிருப்பதால் அனைத்து உறுபபினர்களையும் கொழும்பில் இருக்குமாறு முதலில் ஜனாதிபதி காரியாலயத்தினால் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கென வெளிநாடு சென்றிருந்த அமைச்சர்கள் திருப்பியழைக்கப்பட்டதுடன், வெளிநாடு செல்லத் திட்டமிட்டிருந்த அமைச்சர்கள் சிலரும் தங்கள் பயணங்களை ரத்து செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மூதூரில்....

தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர்கள் தமது முகத்தை துணியால் மறைத்துக் கட்டியிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவரின் சடலம் தற்போது மூதூர் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-4)

## வாழைச்சேனை...

தப்பியோடியபோது அவ் வழியே எதேச்சையாக எதிர்கொண்ட படையினர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், அதில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்து, ஒருவர் காயமடைந்த பின்னரே அந்நபர் விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பமுயன்றவர் என்பது படையினருக்குத் தெரியவந்ததாகவும், காயமடைந்தவரை உடனடியாக அவர்கள் தம்முடன் கொண்டு சென்றுவிட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ச-4)

## பக்தர்களை ஏற்றிவந்த...

சென்ற ஹயஸ் வான் ஒன்றுடன் விபத்துக்குள்ளானது. இதனால் இரு வாகனங்களும் கடலுக்குள் தூக்கிவீசப்பட்டு குடைசாய்ந்தது.

இதன்போது பஸ்ஸில் பயணம் செய்த வயோதிபப் பெண் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். மேலும் 75 இற்கு மேற்பட்ட பக்தர்கள் காயமடைந்தனர். இவர்களில் 15 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏனைய சிறுகாயங்களுக்கு உள்ளான பக்தர்களுக்கு சம்பவ இடத்திற்கு விரைந்த திலீபன் மருத்துவமனை வைத்தியர்களினாலும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினாலும் சிகிச்சை அளிக்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

ஹயஸ்வானில் பயணம்செய்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர்களில் ஆறுமாதக் கைக்குழந்தை ஒன்றும் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஹயஸ் வானில் 15 இற்கு மேற்பட்டவர்கள் பயணம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பக்தர்களினால் கைவிடப்பட்ட நிலையில் பஸ் மற்றும் ஹையஸ் வானிலிருந்த உடைமைகள் மீட்கப்பட்டு வீதியோரமாகக் குவிக்கப்பட்டிருந்து.

இது இவ்வாறிருக்க விபத்துக்குள்ளான பஸ்ஸினுள் இருந்த பயணப்பை ஒன்றிலிருந்து பெருமளவான தங்கநகைகள் மீட்கப்பட்டு ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்த நகைகள் அளவுக்கதிகமாகக் காணப்படுவதால் அவை கள்ளநகைகளாக இருக்கலாமென சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் நேற்றிரவு இரண்டு வாகனங்களும் பாரந்தூக்கி மூலம் அகற்றப்பட்டது. (ச)

# டட்லியின் ஆட்சிக் காலத்தில் இருந்தே சிறுபான்மையினரை ஐ.தே.க. பாதுகாத்தது

## ரணில் விக்கிரமசிங்க



முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் இருந்தே ஐக்கிய தேசியக்கட்சி

சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்ததாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கிடையே சமாதானத்தை நிலைநாட்ட டட்லி சேனநாயக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சிரேஷ்ட தலைவர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டட்லி சேனநாயக்கவின் 94 ஆவது சிராத்த தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய ஒற்றுமை மட்டுமல்லாது, அது இனங்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவும் மேற்கொண்ட அர்ப்பணிப்பு டட்லி சேனநாயக்கவின் சிரேஷ்ட தலைமைத்துவத்திற்கான மிகச் சிறந்த உதாரணமாகும்.

அவரும், அவரது கட்சியும் தேசிய ஒற்றுமையையும், இனங்களுக்கிடையே சமாதானமும் பிரிக்கமுடியாத ஒன்று என்று கருதியது.

இதேபோன்று வடக்குகிழக்கைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளையும் இவர் அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார். அன்றைய காலகட்டத்தில் சகல இன மக்களுக்கும் அவர்களின் சமய சுதந்திரத்தை மட்டுமல்லாது உரிமைகளை அனுபவிக்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது.

மேலும் அவர்களின் உரிமைகளுக்கும் பங்கம் ஏற்படாத வகையில் அந்தத் தலைவர் கவனம் செலுத்தியதாகவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ற-2)

## அரசுடன்...

வெளியேறியதை அடுத்து அரசாங்கத்தின் உறுதியான தன்மை பாதிக்கப்பட்டுள்ளதுடன், மாகாண சபைகளிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

கட்டாயமாக நடத்தப்படவேண்டியுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் மட்டுமல்லாது, இவ்வாறான நிலையில் பொதுத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களும் நடத்தப்பட்டால் அதற்கென பெருமளவு நிதியைச் செலவிட வேண்டியேற்படும் என்பதை சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளனர். (ச)

## பொதுக்கட்ட...

மீண்டும் ஜனாதிபதியைச் சந்தித்து இந்தவிடயம் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் தேசிய ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஹிஸ்புல்லா தலைமையிலான குழுவொன்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்து கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களும் கைச்சாத்திட வாய்பளிக்காதுபோனால் ஆளுங்கட்சியில் உள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் சிலர் எதிர்காலத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர இடமுள்ளதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் அதற்கு முன்னர் அவர்கள் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-4)

# உத்தேசப் பொதுக் கட்டமைப்பில் அனைவரும் உள்ளடங்கவேண்டும்

## அமைச்சர் பேரியல் அஷ்ரப்

(கொழும்பு)

உத்தேச சுனாமி நிவாரணக் கட்டமைப்பு, பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமையவேண்டும் என அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

இதனை இனரீதியாகப் பார்க்காமல் அனைத்து இலங்கையர்களையும் ஒரேகுடையின் கீழ் கொண்டுவரும் அமைப்பாகக் கருதி செயற்படவேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

அமைச்சர் அண்மையில் மாத்தறையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கைப் பொறுத்தமட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களில் 60 சதவீதமானவர்கள் முஸ்லிம்களாக இருக்கின்றனர். எனவே உத்தேசக் கட்டமைப்பில் அவர்களைச் சேர்த்துக்கொள்ள அனைவரும் உதவி செய்யவேண்டுமெனக் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜனாதிபதி ஆற்றும் பணிகள் வரவேற்கத்தக்கது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-09)

மனோகரா யாழ்
அதிரடி வெளியீடு
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லிஆகியோரின் சிறப்பு நடிப்பில்



அந்நியன்
இயக்கம்: ஷங்கர்
இசை: ஹரிஸ் ஜெயராஜ்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயசாந்தி, லட்சுமி, சுஜாதா நடித்த
சூரியா
கா.நே: 11,00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இன்டி பெண்டன்ஸ்டே டைரக்டர் ரோலண்ட் எம்ரிக் மீண்டும் முத்திரை பதிக்கும் படைப்பில்
THE DAY AFTER TOMORROW
(தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை விபரிக்கும் சித்திரம்
கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (பு.நே)
பாடசாலை ஊடாக வரும் மாணவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்

எம்மிடம் சகல விதமான ரீவிக்களும், CD,VCD,DVD PLAYER களும், சகலவிதமான றேடியோக்களும், மற்றும் மின்சார உபகரணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்
நியூ சிற்றி றேடர்ஸ்
மேல்மாடி. இல135/1 கஸ்தூரியார் வீதி குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்
(C- சு) T.P: 021 222 3226

பதவி வெற்றிடம்
உள்ளகச் செய்தியாளர்கள்
ஆண்கள் (இரவுக் கடமை)
பெண்கள் (பகல் கடமை)
ஒப்புநோக்குநர்கள்
ஆண்கள் (இரவுக் கடமை)
பெண்கள் (பகல் கடமை)
(க.பொ.த. உயர்தரத்தில் சித்தி)
புத்தகம் கட்டுநர்கள்
பெண்கள் (புத்தகம் கட்டுவதில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)
வலம்புரி நிறுவனத்திற்கு 6 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் 24.06.2005 அன்று காலை 10 மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் நேரில் வரவும்.
இல:03, 2 ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
ஆளணி முகாமையாளர் வலம்புரி

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.